2020ஆம் ஆண்டுக்கான இந்தியன் பிரிமியர் லீக் தொடரின் (IPL) முழு லீக் போட்டிகளுக்குமான போட்டி அட்டவணை 05ஆம் பக்கத்தில் முழுமையாக தரப்பட்டுள்ளது.

DREAM11 IPL

Follow us:

# தமிழன்

THAMILAN තමිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

நக்கல்நமசிவாயம்




மலர் : 01, இதழ் : 57 சார்வரி வருடம், ஆவணி மாதம் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (08.09.2020) ஹிஜ்ரி - 1442, முஹர்ரம் பிறை - 19, 0115886187 பக்கங்கள் 12 விலை ரூ.20

# 20ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக எதிர்க்கட்சி எம்.பி.க்கள் 9 பேர்!

## ஆளுந்தரப்புடன் இரகசியப் பேச்சு; அமைச்சுப் பதவிகள் மீது கண்வைப்பு



• நமது அரசியல் நிருபர்

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு ஆளுங்கட்சிக்கு நாடாளுமன்ற பெரும்பான்மை கிடைக்கும் சூழ்நிலை இருந்தபோதிலும் அதற்கு ஆதரவாக வாக்களிக்க எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பலர் சுயவிருப்பத்துடன் முன்வந்திருப்பதாக அறியமுடிகின்றது.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனேயே நிறைவேற்ற வேண்டும்.

சர்வஜன வாக்கெடுப்பு அவசியமல்லவென்பதுடன், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் என சட்டமா அதிபர் அண்மையில் அறிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், நாடாளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு இதுவரை மூன்றில் இரண்டு தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு 145 நாடாளுமன்ற உறுப்பினர்கள்...

02

# கிருஷாந்தி படுகொலையின் 24ஆவது ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிப்பு



யாழ். செம்மணி பகுதியில் படுகொலைசெய்யப்பட்ட சுண்டுக்குளி மாணவி குமாரசாமி கிருஷாந்தியின் 24ஆவது ஆண்டு நினைவு தினம் செம்மணி பகுதியில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

அதன்போது செம்மணி பகுதியில் படுகொலைசெய்யப்பட்ட ஏனையவர்களும் நினைவுகூரப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

1996ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி யாழ். சுண்டுக்குளி கல்லூரி மாணவி கிருஷாந்தி (வயது 18) வீதியால் சென்றுகொண்டிருந்தவேளை செம்மணி பகுதியில்....

02

# 20ஆவது திருத்தச் சட்டமூலம் ஒக்டோபர் 3ஆம் வாரம் சபையில்



அரசியலமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக ஒக்டோபர் மாதம் மூன்றாவது வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சட்டமூலம் அரசியலமைப்பின் பிரகாரம், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும்.

குறித்த சட்டமூலம் எதிர்வரும் 16ஆம் திகதிக்குப் பின்னர்...

02

# யாழிலிருந்து நீர்கொழும்புக்கு போதைப்பொருள் கடத்தல்; வர்த்தகர் உட்பட அறுவர் கைது - பொருட்களும் மீட்பு!



யாழ்ப்பாணம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளிலிருந்து சட்டவிரோத போதைப்பொருட்களை நீர்கொழும்பு பகுதிக்கு கடத்தும் நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாக கூறப்படும் செல்வந்த வர்த்தகர் ஒருவர் உள்ளிட்ட 6 உதவியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் ஒரு கோடியே 30 இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருட்களுடன் நீர்கொழும்பு பகுதியில் வைத்து நீர்கொழும்பு பொலிஸாரினால் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளிலிருந்து ஹெரோயின், கேரள கஞ்சா மற்றும் ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருட்களை குறித்த சந்தேகநபர்கள் நீர்கொழும்பு பகுதிக்கு கடத்தியுள்ளமை விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

இதன்படி, 42 கிலோகிராம் கேரள கஞ்சா, 4 கிராம் ஐஸ் மற்றும் 5 கிராம் ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருட்களுடன் இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த வர்த்தகர் நீர்கொழும்பு - பெரியமுல்லை பகுதியில் பல ஹோட்டல்களை நடத்திச் செல்வதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நீர்கொழும்பு - பெரியமுல்லை, யாழ்ப்பாணம் - தொண்டமானாறு, ஜாஎல - படகம, ஹெந்தலை, மாட்டாகொடை, துன்கன்னாவ,...

02

## 20ஆவது திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தி

# இன்று போராட்டம்

“19 இலிருந்து முன்னோக்கி” என்ற தொனிப்பொருளில் மக்கள் எதிர்ப்புப் போராட்டமொன்றை இன்று முன்னெடுக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

இன்று பிற்பகல் 4 மணிக்கு ஜப்பான் நட்புறவு மாவத்தையில் அமைந்துள்ள மாதுளுவாவே சோபித தேரரின் உருவச்சிலைக்கு முன்னால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

நேற்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நாடாளுமன்ற கட்டிடத்தொகுதி, 2ஆவது குழு அறையில் ஒன்றுகூடியிருந்தனர்.

02

# தமிழகத்தில் சிக்கிய பொலிஸ் உத்தியோகத்தர் பண்டாரநாயக்க 13 நாட்கள் விளக்கமறியலில் - இலங்கை கொண்டுவர முயற்சி

## தமிழகம் ஊடாக ஹொங்கொங் செல்ல முயற்சி செய்ததாக தகவல்



சட்டவிரோதமான முறையில் படகு மூலம் இந்தியாவின் தனுஷ்கோடிக்கு சென்ற இலங்கை பொலிஸ் உத்தியோகத்தரான பிரதீப் குமார பண்டாரநாயக்க எதிர்வரும் 13 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் இராமேஸ்வரம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்திய வேளையிலேயே இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. விளக்கமறியல் உத்தரவை அடுத்து, சந்தேகநபரான பிரதீப் குமார பண்டாரநாயக்க, புழல் சிறைச்சாலைக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் அழைத்து செல்லப்பட்டுள்ளார்.

வெளிநாட்டுப் பிரஜையொருவர் எந்தவித ஆவணங்களுமின்றி, சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் பிரவேசித்த குற்றச்சாட்டில் இரண்டு பிரிவுகளின் கீழ் பிரதீப் குமார பண்டாரநாயக்க மீது இராமேஸ்வரம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு குற்றத் தடுப்புப்பிரிவில் பொலிஸ் கான்ஸ்டபிளாக கடமையாற்றிய பிரதீப் குமார பண்டாரநாயக்க, கடந்த இரண்டாம் திகதி மன்னார் வழியாக படகொன்றின் மூலம் தனுஷ்கோடியை சென்றடைந்திருந்தார்.

02

அதிவேக INTERNET
பரந்த வலையமைப்பு
4G LTE

பெற்றுக் கொள்ள விருப்பமான DATA LOAN

326 MB RS. 29
896 MB RS. 49
1793 MB RS. 99

எதிர்பாராமல் டேட்டா முடிந்து விட்டால் டக்கென்று மொபிடெல் இடமிருந்து பிரச்சினைகள் எதுவுமில்லாமல் டேட்டா லோன் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மேலதிக கட்டணம் மற்றும் வரிகள் உண்டு.
நிபந்தனைகள் உண்டு.

செயற்படுத்த அழையுங்கள் #170#

Sri Lanka Telecom Mobitel

# மஞ்சள் மீள் ஏற்றுமதி விவகாரத்தால் இலங்கை - இந்தியாவுக்கிடையில் முரண்பாடு ஏற்படலாம்!

## புறக்கோட்டை இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டு



மஞ்சள் மீள் ஏற்றுமதி விவகாரத்தால் இலங்கை மற்றும் இந்திய நாடுகளுக்கிடையில் வர்த்தக முரண்பாடொன்று ஏற்படுவதற்கான சாத்தியம் எழுந்துள்ளதாக புறக்கோட்டை இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்தியாவிலிருந்து ஆரம்ப காலம் முதல் பல்வேறு பொருட்கள் இறக்குமதிசெய்யப்பட்டு வருவதாகவும், அதனால் இரண்டு நாடுகளுக்கும் இடையில் வர்த்தக ரீதியிலான நெருங்கிய தொடர்பு காணப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும், இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்டுள்ள மஞ்சளை மீள் ஏற்றுமதிசெய்ய எடுத்துள்ள தீர்மானத்தினால் இரண்டு நாடுகளுக்கும் இடையில் வர்த்தக முரண்பாடு ஏற்பட...

02

# மரணதண்டனைக் கைதி பிரேமலாலுக்கு நாடாளுமன்றம் செல்ல நீதிமன்று அனுமதி!



மரணதண்டனை விதிக்கப்பட்ட நிலையில், இலங்கை நாடாளுமன்றத்திற்கு தெரிவான பிரேமலால் ஜயசேகரவை நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள அனுமதி வழங்குமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் இந்த அனுமதி வழங்கப்பட்டது.

பிரேமலால் ஜயசேகரவை நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள அனுமதி வழங்குமாறும், நாடாளுமன்ற அமர்வுகளுக்கு அவரை அழைத்துச் செல்லுமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு இடைக்கால உத்தரவொன்றை பிறப்பித்துள்ளது.

பிரேமலால் ஜயசேகரவினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட்...

02

| லொத்தர் | வாரம் | திகதி | ஆங்கில எழுத்து | இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| சுப்பர் போல் | 1203 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 02ஆம் திகதி | W | 13 43 44 64 |
| அத கோட்டிபதி | 1029 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 02ஆம் திகதி | R | 02 14 35 37 |
| சனிதா வாசனா | 3359 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 02ஆம் திகதி | A | 10 60 71 74 |
| அத கோட்டிபதி | 1031 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 04ஆம் திகதி | B | 13 27 56 67 |
| கோட்டிபதி கப்ருக | 620 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 04ஆம் திகதி | Q | 02 35 63 69 |
| சனிதா வாசனா | 3361 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 04ஆம் திகதி | F | 03 13 22 30 |
| சுப்பர் போல் | 1205 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 04ஆம் திகதி | U | 14 21 62 65 |
| சனிதா வாசனா | 3362ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 05ஆம் திகதி | R | 07 58 60 71 |
| அத கோட்டிபதி | 1032 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 05ஆம் திகதி | Y | 22 28 30 34 |
| சுப்பர் போல் | 1206 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 05ஆம் திகதி | R | 02 33 41 47 |
| அத கோட்டிபதி | 1033 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 06ஆம் திகதி | X | 14 22 39 41 |
| சனிதா வாசனா | 3363 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 06ஆம் திகதி | L | 19 37 60 75 |
| சுப்பர் போல் | 1207 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 06ஆம் திகதி | P | 18 45 58 77 |
| கோட்டிபதி கப்ருக | 621 ஆவது வாரம் | 2020 செப்டம்பர் 06ஆம் திகதி | Q | 05 15 40 45 |

## தவறுக்கு வருந்துகிறோம்...

நேற்றைய எமது பத்திரிகையில் இரண்டாம் பக்கத்தில் பிரசுரமான மின்கொள்வனவு தொடர்பான செய்தியில் இலங்கை மின்சார சபைக்கு ஏற்படக்கூடிய செலவு 21 ஆயிரம் கோடி என்று பிரசுரமானது. 2100 கோடி என்பதே சரியான தொகையாகும். தவறுக்கு வருந்துகிறோம்.

(ஆசிரியர்)

# மத்திய வங்கி ஆளுனருக்கும் டக்ளஸின் விஷேட பிரதிநிதிகளுக்குமிடையில் சந்திப்பு

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் விஷேட பிரதிநிதிகள் நேற்று வடமாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் லக்ஷமனை சந்தித்து, வடமாகாணத்தில் கடன்களைப் பெற்று விவசாயம், கடற்றொழில் மற்றும் சிறு உற்பத்தித்துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் எதிர்கொண்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துரைத்தனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் விஷேட பிரதிநிதிகளாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன், அமைச்சரின் ஆலோசகர் தவராசா, அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா, அமைச்சரின் இணைப்புச் செயலாளர் ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது, யுத்தத்தின் பின்னரான சூழலில் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுப்பதற்காக சுய தொழில் முயற்சிகளில் ஈடுபடும் எதிர்பார்ப்போடு நுண்கடன்களைப் பெற்றுக்கொண்டவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் மற்றும் கடனை செலுத்த முடியாமல் தற்கொலை செய்து கொள்கின்ற அவலம் தொடர்பாகவும் அத்தகையவர்களுக்கு நுண்கடன்களிலிருந்து மீள்வதற்கான வழிவகைகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்றும் அக்குழுவினர் வலியுறுத்தினர்.

அத்துடன் கடந்த காலத்தில் பல சிரமங்களுக்கு மத்தியில் கடன்களைப் பெற்று தொழில் முயற்சிகளில் ஈடுபட்டவர்களில் பலர், தொழில் பாதிக்கப்பட்டு கடன்களை மீளச் செலுத்த முடியாமல் வங்கிகளால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவ்வாறு கறுப்புப் பட்டியலில் இருப்போரில் தொழில் முயற்சியில் ஆர்வம் உள்ளவர்களை பரிகார அடிப்படையில் மீண்டும் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுத்து ஊக்குவிப்பதற்கும் மத்திய வங்கியினால் திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட வேண்டும் என்றும் விஷேட குழு பிரதிநிதிகள் மத்திய வங்கி ஆளுனரிடம் கோரிக்கை விடுத்தனர்.

## செய்தித்துளிகள்

**இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண கைத்தொழிலாளர்கள் செலுத்தும் 14 சதவீத வருமான வரி மற்றும் தங்க இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள 15 சதவீத வரி நீக்கப்படுமென ஜனாதிபதி அறிவித்துள்ளார்.**

★★★★★★

**சீனாவிற்கான இலங்கைத் தூதுவராக பேராசிரியர் பாலித கொஹேன நியமிக்கப்பட்டுள்ளார்.**

★★★★★★

**முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன உட்பட மூவரை ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.**

★★★★★★

**மேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 519 பேரும், பல்வேறு குற்றச்செயல்களால் தேடப்பட்டுவந்த 73 சந்தேகநபர்களும் உள்ளடங்கலாக ஆயிரத்து 287 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

## 20ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக...

இருக்கின்ற போதிலும், அவர்களில் சபாநாயகர் மற்றும் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள பிரேமலால் ஜயசேகர (சொக்கா மல்லி) ஆகியோரும் உள்ளடங்குகின்றமையினால், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு 143 ஆசனங்களே நாடாளுமன்றத்தில் காணப்படுகின்றது.

நாடாளுமன்றம் செல்ல முடியும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று பிரேமலால் ஜயசேகரவிற்கு அனுமதி வழங்கிய போதிலும், அவர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி பிரமாணம் செய்துகொள்ளும் வரை நாடாளுமன்ற உறுப்பினராக அவரை ஏற்றுக்கொள்ள முடியாமையே இதற்கான காரணமாகும்.

இதற்கு மேலதிகமாக அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் டக்ளஸ் தேவானந்தா, அதாவுல்லா, சிவநேசத்துரை சந்திரகாந்தன், அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட ஐவருடன் அரசாங்கத்திற்கு மொத்தமாக 148 ஆசனங்கள் நாடாளுமன்றத்தில் உள்ளன.

தீர்மானமிக்க சந்தர்ப்பத்தில் சபாநாயகருக்கு வாக்களிப்பதற்காக சந்தர்ப்பம் கிடைக்குமானால், அவருடன் சேர்த்து 149 ஆசனங்கள் அரசாங்கம் வசம் காணப்படுகின்றன. இவ்வாறான பின்னணியில், எதிர்கட்சிகளிலுள்ள சுமார் 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்க தயாராகி அது தொடர்பில் மறைமுக பேச்சுகளை நடத்த ஆரம்பித்துள்ளனர்.

எதிர்க்கட்சியிலுள்ள சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தேசிய பட்டியலின் ஊடாக நாடாளுமன்ற பிரவேசத்தை பெற்ற சில சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும் பசில் ராஜபக்ஷவுடன் கலந்துரையாடல்களை நடத்தி வருவதாக அறிய முடிகின்றது. அமைச்சுப் பதவிகளை பெறுவது தொடர்பிலும் சிலர் கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாக அறியமுடிந்தது.

யாரும் எமக்கு ஆதரவளிக்கலாம். ஆனால் உடனடியாக அமைச்சுப் பதவிகளோ அல்லது வேறெந்த பதவிகளோ வழங்கப்படமாட்டாது. 20 ஆவது திருத்தத்தின் பின்னர் அதைப்பற்றி யோசிக்கலாம். ஆதரவளித்து உள்ளே வருவோர் இப்போதைக்கு பின்வரிசை ஆசனங்களில் தான் அமரவேண்டும். என்று அரசின் உயர்மட்டத் தலைவரொருவர் நேற்றிரவு தமிழன் செய்திகளிடம் தெரிவித்தார்.

## கிருஷாந்தி......

அப்போதிருந்த இராணுவ முகாமில் வழிமறித்த இராணுவத்தினரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார். செம்மணி இராணுவ முகாமில் கிருஷாந்தியை தடுத்து வைத்திருந்ததை ஊரவர்கள் கண்ணுற்று மாணவியின் தாயாரிடம் கூறியதையடுத்து, மாணவியின் தாயாரான ஆசிரியை குமாரசாமி இராசம்மா (வயது 59), மாணவியின் சகோதரனும், யாழ். பரியோவான் கல்லூரி மாணவனான குமாரசாமி பிரணவன் (வயது 16) மற்றும் மாணவியின் வீட்டுக்கு அயல் வீட்டில் வசிக்கும் தென்மராட்சி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் உதவியாளராக கடமையாற்றிய சிதம்பரம் கிருபாமூர்த்தி (வயது 35) ஆகியோர் மாணவியை தேடிச்சென்று செம்மணி இராணுவ முகாமில் விசாரித்தவேளை அவர்கள் மூவரையும் இராணுவத்தினர் படுகொலை செய்ததாகவும் கூறப்படுகின்றது.

அன்றைய தினம் நள்ளிரவு படுகொலைசெய்யப்பட்ட நால்வரின் உடல்களையும் செம்மணி பகுதியிலுள்ள வயல்வெளியில் புதைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 20ஆவது திருத்தத்திற்கு எதிராக..

இதன்போது 20ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தை இல்லாமல் செய்து சர்வாதிகாரத்தை நோக்கி நாட்டை கொண்டுசெல்வதற்கு திட்டங்களை வழிவகுக்கும், 20ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு எதிராகவும் அந்தத் திருத்தத்தை தோற்கடிப்பதற்கு உறுதியாக செயற்படவும் ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

இதேவேளை, மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண இதுதொடர்பான யோசனையை முன்வைத்துள்ளதோடு, அதனை குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அசோக் அபேசிங்க வழிமொழிந்துள்ளார்.

மேலும், 19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் காணப்படும் ஜனநாயக கொள்கைகளை மேலும் பலப்படுத்துதல், 19 ப்ளஸ் (அதிகமான) ஏற்பாடுகளை உள்வாங்குவது தொடர்பிலும் இதன்போது அந்தக் கட்சி தீர்மானம் எடுத்துள்ளது.

## யாழிலிருந்து...

லுனுவில - கிரிமெட்டியாவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த சந்தேகநபரான வர்த்தகர், சட்டவிரோத போதைப்பொருட்களை பெருந்தொகையாக கொண்டு வந்து, கொழும்பு, குருநாகல், நீர்கொழும்பு, சிலாபம், கம்பஹா, மாதம்பே, ஜாஎல உள்ளிட்ட பகுதிகளுக்கு விநியோகித்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து நீர்கொழும்பிற்கு கஞ்சா கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்படும் கெப் வாகனம் மற்றும் நீர்கொழும்பிலிருந்து ஏனைய பகுதிகளுக்கு போதைப்பொருட்களை விநியோகிக்க பயன்படுத்தப்படும் லொறி ஆகியவற்றை பொலிஸார் தமது பொறுப்பிற்கு எடுத்துள்ளனர். கேரள கஞ்சாவிற்கு சந்தையில் காணப்படுகின்ற கேள்விக்கு அமைய குறித்த வர்த்தகர் அதனை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வருவதுடன், அங்கிருந்து நீர்கொழும்பு பகுதிக்கு அதனை அனுப்பி வைக்கின்றமையும் விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்டுள்ள கெப் வாகனத்தின் பின்புறத்தில் மறைத்து வைப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள பகுதியொன்றும் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து தலுபொத்த சிறைச்சாலை வீதியிலுள்ள வீடொன்றிற்கு கொண்டு வரப்படும் போதைப்பொருள், அங்கிருந்து ஏனைய பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வந்தமையும் தெரியவந்துள்ளது. குறித்த வர்த்தகர், இந்த மாடி வீட்டை குத்தகை அடிப்படையில் பெற்று பயன்படுத்தி வந்தமை விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது. இந்த வீட்டிற்கு போதைப்பொருளை கொள்வனவு செய்வதற்காக வருகை தந்த மூவரை கைதுசெய்துள்ளதுடன், போதைப்பொருள் விநியோகத்திற்காக வருகைத் தந்த லொறியொன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த வர்த்தகர் போதைப்பொருள் வர்த்தகத்தின் ஊடாக உழைத்த பணம் மற்றும் கொள்வனவு செய்த சொத்துக்களை, நிதிச் சலவை தடுப்புச் சட்டத்தின் கீழ் அரசுடைமையாக்குவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய, தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

## 20ஆவது...

வரும் முதலாவது சபை நடவடிக்கைகளின் போது, முதலாவது வாசிப்பிற்காக முன்வைக்கப்படவுள்ளது. சட்டமூலத்தின் மீதான முதலாவது வாசிப்பின் பின்னர், அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும் எனில், அதற்கான சந்தர்ப்பத்திற்காக ஒரு வார கால அவகாசம் வழங்கப்படவுள்ளது.

அதன் பின்னர் சட்டம் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக மூன்று வார காலம் வழங்கப்பட வேண்டும் என்பதுடன், சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்புக்கு அதன் பின்னரே சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

20ஆவது திருத்த சட்டமூலத்திற்கான அமைச்சரவை அங்கீகாரம் கடந்த 2ஆம் திகதி கிடைக்கப் பெற்றது.

அதன்பின்னர், 20ஆவது திருத்த சட்டமூலம் தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் 3ஆம் திகதி வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மஞ்சள்...

இடமளிக்க முடியாது என இறக்குமதியாளர்கள் கூறுகின்றனர்.

இதனால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நிலையில், துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 இலட்சம் மெற்றிக் தொன் மஞ்சளை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு புறக்கோட்டை இறக்குமதியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். நாடு பூராகவும் தற்போது மஞ்சளுக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கறுப்பு சந்தையின் ஊடாக மஞ்சள் ஒரு கிலோகிராம் 5000 ரூபா முதல் 7000 ரூபா வரையான விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இவ்வாறான நிலையில், மஞ்சளை நாட்டிற்குள் கொண்டு வர அனுமதி வழங்கப்படும் பட்சத்தில், மஞ்சள் ஒரு கிலோகிராமை 750 ரூபாவிற்கு விற்பனை செய்வதாகவும் புறக்கோட்டை இறக்குமதியாளர்கள் அதிகாரிகளிடம் உறுதியளித்துள்ளனர்.

## தமிழகத்தில்...

சட்டவிரோதமாக ஒருவர் நாட்டிற்குள் பிரவேசித்துள்ளதாக தனுஷ்கோடி மீனவர்கள் கரையோர பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில், சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடி தப்பியோட முயன்ற பிரதீப் குமார பண்டாரநாயக்கவை அந்த நாட்டு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அதையடுத்து, நடத்தப்பட்ட விசாரணைகளின் ஊடாக அவர் இலங்கையைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் என்பது தெரியவந்துள்ளது.

அத்துடன், சப்புகஸ்கந்த பகுதியில் அண்மையில் கைப்பற்றப்பட்ட 23 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கடத்தலுடன் பிரதீப் குமார பண்டாரநாயக்கவை தொடர்புபட்டுள்ளமையும் வெளியாகியிருந்தது. இந்த சம்பவம் தொடர்பில் இலங்கை பொலிஸாரினால் தேடப்பட்ட நிலையிலேயே தான் இந்தியாவிற்கு தப்பி வந்ததாக பிரதீப் குமார் பண்டாரநாயக்க அந்த நாட்டு பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இதையடுத்து, பிரதீப் குமார பண்டாரநாயக்கவை மீது இரண்டு பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழகத்தில் கைது செய்யப்பட்டுள்ள பிரதீப் குமார் பண்டாரநாயக்கவை தங்களிடம் ஒப்படைக்குமாறு உத்தியோகப்பற்றற்ற முறையில் இலங்கை பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளதாக தமிழக பொலிஸார் கூறியுள்ளார்கள் என எமது இராமேஸ்வர செய்தியாளர் தெரிவித்தார்.

எனினும், இலங்கை பொலிஸாரிடமிருந்து உத்தியோகபூர்வ கோரிக்கை கிடைக்காமையினால், பிரதீப் குமார பண்டாரநாயக்கவை மீதான விசாரணைகள் தொடர்ந்தும் தமிழகத்தில் முன்னெடுக்கப்படும் என தமிழக பொலிஸார் கூறியுள்ளனர்.

இதேவேளை மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் தமிழகம் தப்பித்துச் செல்ல போதைப்பொருள் கடத்தல்காரர்களே உதவி செய்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. தமிழகத்திலிருந்து ஹொங்கொங்கில் பணியாற்றும் தனது மனைவியிடம் செல்வதற்கு இவர் தீர்மானித்திருந்ததாக மேலும் அறியக்கிடைத்துள்ளது. பொலிஸ் உத்தியோகத்தரின் மனைவி ஹொங்கொங் சுப்பர் மார்க்கட் ஒன்றின் முகாமையாளராக பணிபுரிகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மரண தண்டனை...

மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட, மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவரும் நீதிபதியுமான ஏ.எச்.எம்.டி.நவாஸ் மற்றும் சோபித்த ராஜகருணா ஆகிய நீதிபதிகள் குழாமினால் இந்த இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகியுள்ள பிரேமலால் ஜயசேகரவின் தெரிவானது, சட்டவிரோதமானது என நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படவில்லை என மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் நீதிபதி ஏ.எச்.எம்.டி.நவாஸ் உத்தரவை பிறப்பித்து நீதிமன்றத்தில் அறிவித்திருந்தார்.

அரசியலமைப்பின் பிரகாரம், மனுதாரருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு கிடைக்க வேண்டிய அனைத்து விதமான சிறப்புரிமைகளையும் அனுபவிப்பதற்கு சட்டத்தில் எந்தவித தடையும் கிடையாது என நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அதனால், பிரேமலால் ஜயசேகரவிற்கு நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியபிரமாணம் செய்துகொள்ள சட்டத்தில் எந்தவித தடையும் கிடையாது என நீதிபதி ஏ.எச்.எம்.டி.நவாஸ் கூறினார்.

இதன்படி, பிரேமலால் ஜயசேகரவை நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள அனுமதி வழங்குமாறு மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய, வெலிக்கடை சிறைச்சாலை பணிப்பாளர் மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க ஆகியோருக்கு நீதிமன்றம் அறிவித்தலை அனுப்பி வைத்துள்ளது.

இந்த மனு மீதான விசாரணைகளை எதிர்வரும் மே 29ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது இரத்தினபுரி - கஹவத்தை பகுதியில் தேர்தல் வன்முறை சம்பவமொன்று பதிவாகியிருந்தது.

தேர்தல் பிரசார ஏற்பாடுகளை செய்துகொண்டிருந்த தரப்பினர் மீது அடையாளம் தெரியாத சிலர் துப்பாக்கி பிரயோகம் நடத்தியிருந்தனர். இந்த சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

இந்த துப்பாக்கி பிரயோக சம்பவத்துடன் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர தொடர்புபட்டதாக தெரிவித்து, அவர் கைதுசெய்யப்பட்டதுடன், அவர் மீதான நீதிமன்ற விசாரணைகள் நடத்தப்பட்டு வந்திருந்தன.

இவ்வாறான பின்னணியில், கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் இறுதிக் காலப் பகுதியான ஜுலை 31ஆம் திகதி இந்த வழக்கு மீதான தீர்ப்பை இரத்தினபுரி மாவட்ட மேல்நீதிமன்றம் வழங்கியிருந்தது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிட்ட பிரேமலால் ஜயசேகர உள்ளிட்ட மூன்று பேருக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்து அன்றைய தினம் தீர்ப்பளித்திருந்தது.

தீர்ப்பு அறிவிக்கப்பட்ட நிலையில், பிரேமலால் ஜயசேகர கொழும்பு - வெலிக்கடை விளக்கமறியல் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

விளக்கமறியலில் இருந்தவாறே தேர்தலில் போட்டியிட்ட பிரேமலால் ஜயசேகர, இரத்தினபுரி மாவட்டத்தில் 142,037 வாக்குகளைப் பெற்று அந்த மாவட்டத்தில் இரண்டாவது இடத்தை தனதாக்கிக் கொண்டதுடன், அவர் நாடாளுமன்ற உறுப்பினராகவும் தெரிவாகியிருந்தார்.

இந்த நிலையில், மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள பிரேமலால் ஜயசேகர, நாடாளுமன்ற ஆசனத்தில் அமர்வதற்கோ அல்லது நாடாளுமன்ற வாக்கெடுப்புக்களில் கலந்துக்கொள்வதற்கோ சந்தர்ப்பத்தை வழங்க முடியாது என சட்டமா அதிபர் அண்மையில் அறிவித்திருந்தார்.

நாடாளுமன்ற செயலாளர் நாயகம், நீதி அமைச்சு மற்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சட்ட மாஅதிபர் இந்த அறிவித்தலை பிறப்பித்திருந்ததாக சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் பேச்சாளர் நிஷாரா ஜயரத்ன தெரிவித்திருந்தார்.

இலங்கை அரசியலமைப்பின் பிரகாரம், எவரேனும் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்படும் பட்சத்தில், அவர் வாக்குரிமையை கூட இழக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், பிரேமலால் ஜயசேகர நாடாளுமன்றத்திற்கு பிரவேசிக்க முடியுமா? முடியாதா? என்பது தொடர்பில் சட்ட மாஅதிபருக்கு தீர்மானிக்க முடியாது என அமைச்சர் வாசுதேச நாணயக்கார அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து கூறியிருந்தார்.

இவ்வாறான பின்னணியில், பிரேமலால் ஜயசேகரவை நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு சிறைச்சாலை திணைக்களத்திற்கு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அண்மையில் நாடாளுமன்ற அமர்வுகளின் போது உத்தரவு பிறப்பித்திருந்தார்.

நாடாளுன்றத்திற்கு தெரிவானவர்களின் பெயர் பட்டியல் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலில் கூட தனது பெயர் இடம்பெற்றுள்ளமையினால், தன்னை நாடாளுமன்ற அமர்வுகளுக்கு செல்ல அனுமதி வழங்குமாறு சிறைச்சாலைகள் திணைக்களத்திடம் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும், நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப்பிரமாணம் செய்வதற்கு கூட, பிரேமலால் ஜயசேகரவிற்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில், தன்னை நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துக்கொள்ள அனுமதி வழங்குமாறு கோரி பிரேமலால் ஜயசேகர மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அண்மையில் ரிட் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணைகள் நேற்று இடம்பெற்ற வேளையிலேயே, பிரேமலால் ஜயசேகரவிற்கு நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# கமல் குணரத்னவினால் எழுதப்பட்ட நூல்கள் ஜனாதிபதியிடம் கையளிப்பு





பாதுகாப்புச் செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்னவால் எழுதப்பட்ட 'பாதாளயோ' (பாதாள உலகத்தினர்) என்ற நாவலும் 'கோட்டாபய' என்ற நூலின் ஆங்கிலப் பிரதியும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

உண்மையான பல நிகழ்வுகளை அடிப்படையாகக்கொண்டு 'பாதாளயோ' என்ற நாவல் எழுதப்பட்டுள்ளது. 'கோட்டாபய' என்ற சிங்கள நூல் கடந்த வருடம் வெளியிடப் பட்டிருந்ததுடன், இம்முறை அதன் ஆங்கிலப் பிரதி வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்த இரு நூல்களினதும் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு ஆனந்தா கல்லூரியின் குலரத்ன மண்டபத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கமல் குணரத்னவால் இதற்கு முன்னர் 'நந்திக்கடல் வழியே' என்ற சிங்கள மொழி மூலமான நூலும் அதன் ஆங்கிலப் பிரதியான 'Road To Nandikadal' உட்பட கடொல் எத்து, உத்தர தேவி, கோட்டாபய ஆகிய ஐந்து நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

பாத்தாளயோ மற்றும் **'GOTABAYA'** ஆங்கிலப் பிரதி அவரால் எழுதப்பட்ட 6ஆவதும் 7ஆவதும் நூல்களாகும்.

இரண்டு நூல்களினதும் முதற் பிரதிகள் கமல் குணரத்னவால் ஸ்ரீ கல்யாணி சாமகிரி தர்ம மகா சங்க சபையின் மகாநாயக்க தேரர் சங்கைக்குரிய இத்தேபானே தம்மாலங்கார நாயக்க தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினருக்கு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் நூல்கள் வழங்கப்பட்டன.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, பந்துல குணவர்தன, மஹிந்தானந்த அலுத்கமகே, சரத் வீரசேகர, நாலக்க கொடகேவா ஆகியோரும் அமைச்சுகளின் செயலாளர்கள், முன்னாள் இராணுவத் தளபதிகள், தற்போதைய தளபதிகள் உள்ளிட்ட பாதுகாப்புத்துறை முக்கியஸ்தர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.





எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுகொண்டபோது...

# கிளிநொச்சியில் அதிகரித்துள்ள ஆதனவரிக்கு எதிராக மக்கள் போராட்டம்!

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையால் அறவிடப்படவுள்ள அதிகரித்த ஆதன வரியை மக்களின் நலன்கருதி குறைக்காதுவிடின் பாதிக்கப்படவுள்ள மக்களை ஒன்றுதிரட்டி போராட்டம் மேற்கொள்ளப்படும் - என கரைச்சி பிரதேச சபையின் சமத்துவக் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர். இப்பத்திரிகையாளர் சந்திப்பில் சமத்துவக் கட்சியின் சுயேட்சைக் குழு பிரதேச சபை உறுப்பினர்களான த.மோகன்ராஜ், த.ரஜனிகாந், கப்பிரயல் லோறன்ஸ், இ.இளங்கோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டம் வறுமையில் முன்னிலையில் இருக்கிறது. பெரும்பாலான மக்கள் மூன்றுவேளை உணவு உண்பதே கேள்விக்குரியது. யுத்தத்தின் பாதிப்புகளை முழுமையாக எதிர்கொண்டு படிப்படியாக மீண்டு வரும் மாவட்டமாக காணப்படுகிறது. இப்படியான ஒரு மாவட்டத்தில் புதிதாக ஆதனவரி அறவிடுகின்றபோது எடுத்த எடுப்பிலேயெ பத்து வீதம் என்கின்ற அதிகரித்த வீதத்தில் அறவிடுவது மக்களை பெரும் சுமைக்குள் தள்ளிவிடும்.

மேலும், புதிதாக ஆதனவரி அறவிடுவதற்கு மக்களின் ஆதனங்களின் மதிப்பீடுகள் தற்போதைய சந்தை பெறுமதியில் மதிப்பிடப் பட்டன. எனவே, சொத்துகளின் பெறுமதியும் தற்போதைய சந்தை பெறுமதியில் அதிகரித்து காணப்படும் இந்நிலையில், இந்த அதிகரித்த பெறுமதிக்கு அதிக வீதத்தில் வரி அறவிட்டால் அது மக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளிவிடும். இதனை அந்த மக்களின் பிரதிநிதிகள் என்றவகையில் நாம் பார்த்துகொண்டிருக்க முடியாது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட சபையானது மக்களுக்குரியதாக இருக்கவேண்டுமே தவிர, மக்களுக்கு எதிரானதாக இருக்கக் கூடாது. ஆனால், கரைச்சி பிரதேச சபையின் செயற்பாடுகள் மக்கள் நலன்களுக்கப்பால் கட்சி நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. தன்னிச்சையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே, கரைச்சி பிரதேச சபை இதனை உடனடியாக நிறுத்தவேண்டும். இல்லையேல் நாம் மக்களை திரட்டி வெகுஜன போராட்டத்தை மேற்கொள்வோம் எனறு தெரிவித்தனர்.

# தற்போது நாடாளுமன்றம் செல்வதற்கான தேவையில்லை

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு



நாடாளுமன்றத்துக்கு வரவேண்டுமென்ற தேவை தற்போது தனக்கில்லை என்றும் தற்போதுள்ள நிலைமை தனக்கு சிறப்பானதாக இருப்பதாகவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய ஒருங்கிணைப்பாளர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொட்டதெனிய, படல்கமவில் அமைந்துள்ள இறப்பர் கைத்தொழிற்சாலையை பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,


நாங்கள் எப்போதும் 19ஆவது அரசியலமைப்புக்கு ஆதரவளிக்கவில்லை. நான் அந்தத் திருத்தத்துக்கு வாக்களிக்கவும் இல்லை. எங்கள் தரப்பு உறுப்பினர்களும் வாக்களிக்கவில்லை. அத்துடன், அநேகமானவர்கள் 20ஆவது திருத்தம் கொண்டுவரப்படும் என்ற வாக்குறுதியின் அடிப்படையிலேயே அவர்கள் வாக்களித்திருந்தார்கள்.

தற்போது நாடாளுமன்றத்துக்கு செல்ல வேண்டுமென்ற தேவை இல்லை. தற்போதுள்ள நிலைமை சிறந்தது என்று நான் கருதுகிறேன்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கே மக்கள் வாக்களித்தார்கள். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இருக்குமாக இருந்தால், அந்த முறைமைக்கமைவாக ஜனாதிபதிக்கு பொறுப்பு, அதிகாரம் ஆகிய இரண்டையும் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# எம்.டி. நியூ டயமன்ட் கப்பலில் மேலும் ஏதேனும் வெடிப்பு இடம்பெற வாய்ப்புள்ளதா?

## வெளிநாட்டு நிபுணர்கள் ஆய்வு



அம்பாறை சங்கமன்கண்டி கடற்பரப்பில் தீப்பிற்றிய எம்.டி நியூ டயமன்ட் கப்பல் தொடர்பில் ஆய்வுசெய்வதற்காக பிரித்தானியா மற்றும் நெதர்லாந்திலிருந்து விசேட நிபுணர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இதேவேளை, கப்பலிலிருந்து எண்ணெய்க் கசிவு ஏற்பட்டால் அதனைத் தடுக்கும் வகையில் இந்திய கடற்பாதுகாப்புத் திணைக்களத்தின் 20 பொறியியலாளர்கள் அந்தப் பகுதிக்கு வந்துள்ளனர். இவர்கள் மத்தள சர்வதேச விமான நிலையத்தினூடாக வருகை தந்துள்ளனர்.

இந்த நிபுணர்கள் குழுவில் இரு பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்பதோடு, மீட்பு நடவடிக்கை, பேரழிவு மதிப்பீடு மற்றும் சட்ட ஆலோசனை ஆகியவற்றில் நிபுணத்துவம் வாய்ந்த 10 பிரித்தானிய மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த விசேட நிபுணர்கள் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் கிழக்கு கடற்பரப்பின் சங்கமன்கண்டி இறங்குதுறையில் தீ விபத்துக்குள்ளான நியூ டயமன்ட் எண்ணெய்க் கப்பலில் ஏற்பட்ட தீப்பரவல் தொடர்பான ஆய்வு நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகியிருந்தன. தீப்பற்றியுள்ள கப்பலுக்குச் செல்வதற்கான வசதிகளை இலங்கை கடற்படையினர் வழங்கியிருந்தனர். கப்பலின் தற்போதைய நிலைமை, எதிர்வரும் நாட்களில் ஏதேனும் வெடிப்பு இடம்பெற வாய்ப்புள்ளதா? ஆகியவை தொடர்பாக இவர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

இலங்கைக்கு கிழக்கே சங்கமன்கண்டி இறங்குதுறையில் 38 கடல் மைல்கள் தொலைவில் எம்.டி. நியூ டயமன் என்ற எண்ணெய்த்தாங்கிக் கப்பல் கடந்த வியாழக்கிழமை காலை 8 மணியளவில் தீ விபத்திற்குள்ளாகியுள்ளதுடன், கப்பலின் பிரதான இயந்திர அறையில் கொதிகலன் வெடித்ததைத் தொடர்ந்து தீப் பரவல் ஏற்பட்ட நிலையில், இரண்டு நாட்களாக தீயைக் கட்டுப்படுத்த தீவிர முயற்சி எடுக்கப்பட்டது.

இதன்பலனாக, இலங்கைக் கடற்படை, விமானப்படை, துறைமுக அதிகாரசபை மற்றும் இந்திய கடற்படை, இந்திய கடலோரப் பாதுகாப்புப் படை ஆகியன இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900 / 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com
2020, செப்டெம்பர் 08ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# தேவை கடும் நடவடிக்கை !

போதையில் வாகனம் செலுத்தியதால் மட்டக்குளியில் விபத்தை ஏற்படுத்தி யுவதியொருவர் உட்பட மூன்று பேருக்கு மரணத்தை விளைவித்த சாரதியொருவர் அந்தச் சந்தர்ப்பத்தில் ஹெரோயின் போதைப்பொருள் பயன்படுத்தியிருந்தார் என்று அவரது இரத்தமாதிரியில் நடத்தப்பட்ட பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

மழை நேரத்தில் அதிக வேகத்தில் வாகனத்தை செலுத்தியமை, வாகனம் செலுத்தும்போது போதையில் இருந்தமை, உரிய சாரதி அனுமதிப்பத்திரங்களை வைத்திருக்காமை உட்பட்ட பல தவறுகளை அந்தச் சாரதி செய்திருக்கிறார். விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அவர் தொடர்பில் விசாரணைகள் நடக்கின்றன.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் யுவதி அமிதா சுந்தரராஜ், இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் தர உயர்பதவியை வகித்த ஒருவர். மற்ற இரண்டு ஓட்டோ சாரதிமாரின் உயிர்களும் பெறுமதியானவை என்றாலும் இந்த யுவதியின் சேவை நாட்டுக்கு பெரிதும் தேவையான ஒன்றாகவே இருந்ததை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இலங்கையிலும் வெளிநாட்டிலும் கல்விபயின்று ஏனையவர்களைப் போன்ற வெளிநாட்டு வாழ்க்கையை - தொழிலை தேர்ந்தெடுக்காமல் நாட்டுக்காக சேவையாற்ற வந்த யுவதியின் இந்த அகால உயிரிழப்பு வேதனையானது. இதை விபத்தென்று சொல்வதைவிட கொலை என்றே கூறிவிடலாம். விபத்தின் சி.சி.ரி.வி. விடியோ வையும், சாரதியின் செயற்பாடுகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஒரு கொலையே நடந்திருக்கிறது என்சூந எண்ணத் தோன்றுகின்றது.

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருவதை ஊடகங்களில் காணக்கூடியதாக இருக்கிறது. போதைப்பொருள் முற்றாக ஒழிக்கப்படுமென்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூட கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தலில் பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார். ஆனால், போதைப்பொருள் ஒழிப்புக்கப்பால் இப்படியான சம்பவங்களின் காரணகர்த்தாக்களுக்கு எதிராக எவ்வகையான நடவடிக்கைகள் எடுக்கப்படப் போகின்றன?

மட்டக்குளியில் விபத்தை ஏற்படுத்திய சாரதி இரண்டு வாரங்களுக்குப் பின்னர் எப்படியோ அபராதத்தைச் செலுத்தி பிணையில் வெளியே வந்துவிடுவார். அதிகபட்சமாக அவரின் சாரதி அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும். ஆனால், அவருக்குத்தான் சாரதி அனுமதிப்பத்திரமே இல்லையே? அப்படியே அது இரத்துச்செய்யப்பட்டாலும் போலியான சாரதி அனுமதிப்பத்திரம் தயாரித்து மீண்டும் இதே தொழிலை அவர் செய்யமாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்? நாட்டுக்கு சேவையாற்றக்கூடிய அந்த யுவதியை போன்ற இன்னொருவரை உருவாக்க இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும்? இந்த உயிரிழப்புக்கு நீதி என்ன? அவர் உட்பட ஓட்டோ சாரதிமார் இருவரின் குடும்பங்களுக்கு கிடைக்கும் நீதி என்ன?

சாதாரணமாக போதைப்பொருளை பாவித்து இப்படியான விபத்துகளை ஏற்படுத்திவிட்டு சட்டத்தின் ஓட்டைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள குற்றவாளிகள் முனையும்போது சமூகத்தில் அது தவறான முன்னுதாரணத்தை வழங்குகிறது. கடுமையான தண்டனைகள் வழங்கப்படாத பட்சத்தில் இவ்வாறான சம்பவங்கள் தொடரத்தான் செய்யுமென்பதை அரசு கவனத்திற்கொள்ள வேண்டும்.

வெறுமனே போதைப்பொருளை ஒழிப்பதாகக் கூறி அவற்றை கைப்பற்றுவதுடன் மட்டும் நின்றுவிடாமல் இப்படியான விடயங்களை ஆராய்ந்து அவற்றுக்கு உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும். போதைப்பொருள் பாவனையாளர்களால் ஏற்படும் விபத்துகள் மாத்திரமல்ல, இதர அராஜகங்களையும் அடக்கியாகவேண்டும். நாட்டிற்கும் வீட்டிற்கும் அப்போதே நிம்மதி கிடைக்கும்.

**"தமிழன்" பத்திரிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை news@liberty.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.**

# ஜனநாயகத்தைப் படுகுழியில் தள்ளும் 20

- பிரசன்னா காசிலிங்கம் -

ஜனாதிபதி என்னும் பதவியின் அதிகாரங்கள் மூலம் நாட்டின் ஜனநாயக விழுமியங்களைப் படுகுழியில் தள்ளும் நடவடிக்கையில் கோட்டபாய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் செயற்படத் தொடங்கியுள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து ஒரு மாத காலத்திற்குள் ஜனாதிபதியின் வசம் மீண்டும் அதிகாரங்கள் கிடைக்கும் வகையிலாக, ஏனைய கட்சிகளின் ஆலோசனைகள் உள்வாங்கப்படாமல் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை தயாரித்து வர்த்தகமானியில் வெளியிட்டுள்ளது அரசாங்கம்.

நாட்டின் ஜனநாயகத்திற்கு எதிராக அமைந்துள்ள



ஜனாதிபதியின் உச்ச அதிகாரங்களை கடந்த ஆட்சியில் 19ஆவது திருத்தச் சட்டமூலம் குறைக்கப்பட்ட நிலையில், மீண்டும் ஏன்? ஜனாதிபதிக்கு வானளவு அதிகாரங்களை உள்ளடக்கிய 20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலத்திற்கு தற்போதைய அரசாங்கம் அவசரப்படுகின்றது என்ற கேள்வி எழுகின்றது.

இந்நிலையில், இந்த திருத்தச் சட்டமூலத்திற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி போன்ற கட்சிகள் தங்களது கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. ஆனாலும், 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றியே தீருவோம் என்று ஆளும் கட்சியிலுள்ளவர்கள் நாளுக்குநாள் நம்பிக்கை வெளியிட்டுவருகின்றார்கள்.

இலங்கை அரசியல் வரலாற்றில் ஜனாதிபதியின் அதிகாரம் என்பது பிரபஞ்சத்தைப் படைத்த கடவுளின் அதிகாரத்திற்கு ஒப்பாக அமைந்துள்ளது எனலாம். 1972ஆம் ஆண்டு இலங்கையின் முதலாவது அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு, அதன்பின்னர் 1978இல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை அறிமுகப்படுத்தி அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்விரண்டு அரசியலமைப்புகளும் மக்களின் அனுமதியின்றி அவர்களது எவ்வித கருத்துகளும் உள்வாங்கப்படாமல், மக்களின் பிரதிநிதிகள் என்ற போர்வையில் உருவாக்கப்பட்டன.

நிறைவேற்று அதிகாரம்கொண்ட அரசியலமைப்பானது 42 வருட காலத்தில் 19 தடவைகள் திருத்தியமைக்கப்பட்டபோதும், நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்கவேண்டுமென்று கடந்த காலங்களில் பதவி வகித்த ஜனாதிபதிகள் தெரிவித்திருந்தாலும், அவர்கள் அனைவருமே அதனைச் செய்ய முன்வரவில்லை. ஆனால், ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதாக வாக்குறுதியளித்து, ரணில் விக்கிரமசிங்க, சந்திரிக்கா மற்றும் சிவில் அமைப்புகள் சேர்ந்து 2015இல் மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கினார்கள். கடந்த நல்லாட்சியில் 19ஆவது திருத்தச் சட்டமூலம், ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் குறைக்கப்பட்டு, நீதிமன்றத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் பதில் கூறவேண்டிய நபராகவும் ஜனாதிபதி ஆக்கப்பட்டார். மேலும், நாடாளுமன்றம் அரசியலமைப்பு சபையாகவும் மாற்றியமைக்கப்பட்டது. நாடாளுமன்றத்தை நான்கரை ஆண்டுகள் முடிவடைந்த பிற்பாடுதான் ஜனாதிபதியால் கலைக்கமுடியும். 18ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளபடி ஒருவர் எத்தனை தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம் என்ற சரத்தையும் நீக்கியிருந்தார்கள். இவ்வாறு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஜனநாயகத்திற்கு வழிவகுக்கும் சட்டங்களை முற்றாக மறுதலிக்கும் வகையில் 20ஆவது திருத்தச் சட்டமூலம் அமைந்துள்ளது.

பிரதமரை நீக்கும் அதிகாரம், எந்த அமைச்சையும் பொறுப்பேற்கும் அதிகாரம், ஒருவருடத்தின் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம், உயர் பதவிகளை வழங்கும் அரசியல் பேரவை நீக்கப்பட்டு நாடாளுமன்றப் பேரவை முன்வைக்கப்படல், இப்பேரவையில் சிவில் அமைப்புகளுக்கு இடமளிக்கப்படாமை, கட்டுப்பாடற்ற அமைச்சர்களின் நியமனம், இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் தேர்தலில் போட்டியிடல் போன்ற ஜனநாயகத்திற்கு பங்கம் விளைவிக்கக்கூடிய அதிகாரங்கள் ஜனாதிபதி என்னும் தனிமனித நபருக்கு வழங்கும் வகையில் 20ஆவது திருத்தச் சட்டமூலத்தில் உள்ளடங்கப்பட்டுள்ளன.

மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்கக்கூடிய வகையில் அமைந்துள்ள 13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைத்துள்ள 19ஆவது திருத்தச் சட்டம் ஆகியன நாட்டிற்கு ஆபத்து என்று தெரிவிக்கும் மஹிந்த தலைமையிலான பௌத்த மேலாதிக்க சிங்கள

> **“எவரும் இச்சட்டத்திற்கெதிராக உயர்நீதிமன்றத்தை நாடாமல்விட்டால், எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் 20ஆவது திருத்தச் சட்டமூலம் எவ்வித திருத்தங்களுக்கும் உட்படாமல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாம். நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தோடு 20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற அரசாங்கம் கடும் பிரயத்தனம் மேற்கொள்ளும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை”**

அரசியல்வாதிகளின் நல்லிணக்க மனோநிலை எவ்வாறு அமையப்போகிறது?

சிறுபான்மையினருக்கு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையில் அதிகாரப் பரவலாக்கலை பகிர்ந்தளித்துள்ள சட்டத்தை நாட்டுக்கு ஆபத்து என்று கூறுவது, சிறுபான்மையினரின் மீதான அடக்குமுறையைத்தான் வெளிக்காட்டுகின்றது. அதேநேரம், 19ஆவது திருத்தச்சட்டத்தினால்தான், கடந்த நல்லாட்சியில் பாரதூரமான விளைவுகளை நாடு சந்தித்தது என குற்றஞ்சாட்டப்படுகின்றது. உண்மையில் மைத்திரிபால சிறிசேனவிற்கும் ரணிலுக்குமிடையிலான நல்லெண்ண உறவின்மையால்தான் பாரதூரமான விளைவுகளை நாடு சந்தித்துள்ளது. குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமெனில், இவர்களின் நிர்வாகத் திறமையற்ற செயலினால்தான் பாரதூரமான விளைவுகளை நாடு சந்தித்தது. அதற்காக 19 ஆவது திருத்தச் சட்டத்தினால் நாட்டுக்கு ஆபத்து என்று எடுத்தவீச்சில் அபத்தமாக கூறிவிட முடியாது.

“தனிநபருக்கு நிறைவேற்று அதிகாரம் தடையின்றி முழுமையாகக் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே 20ஆவது திருத்தச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டு, நாட்டை மரணப் பொறிக்குள் தள்ளப்போகின்றது அரசாங்கம்” என்று ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார். கடந்த ஆட்சியில் ரணிலும் மைத்திரிபால சிறிசேனவும் விட்ட தவறைத்தான் நாட்டு மக்கள் இனி அனுபவிக்கப்போகின்றார்கள் எனலாம். புதிய அரசியலமைப்பை உருவாக்கி அதன்மூலம் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வையும், ஜனநாயகத்தை காக்கக்கூடிய வகையில் சட்டங்களையும் இயற்றியிருந்திருக்க முடியும். ஆனால், அந்த அரிய சந்தர்ப்பத்தை தவறவிட்டுள்ளார்கள்.

“ஜனநாயகத்திற்கு சாவுமணியடிக்கும் வகையிலான முன்மொழிவுகளைக் கொண்டுள்ள 20ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடுமையான நிலைப்பாட்டை எடுக்கும். இதுதொடர்பில் ஏனைய கட்சிகளுடன் கைகோர்த்து செயற்படவும் தயாராகவுள்ளோம்” என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார். ஆனால், 20ஆவது திருத்தச் சட்டத்தினால் சிறுபான்மையினருக்கு எவ்வித பாதிப்புமில்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

அரசியல்வாதிகளின் குற்றச்சாட்டுகள் இவ்வாறு இருக்கையில், நாடாளுமன்றக் குழு விவாதத்தின் போது 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள முடியும். அல்லது இதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கவும் முடியும்.

இச்சட்டத்திற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தத் தேவையில்லாத நிலையில், எவரும் இச்சட்டத்திற்கெதிராக உயர்நீதிமன்றத்தை நாடாமல்விட்டால், எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் 20ஆவது திருத்தச் சட்டமூலம் எவ்வித திருத்தங்களுக்கும் உட்படாமல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாம்.


நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தோடு 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் கடும் பிரயத்தனம் மேற்கொள்ளும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அதேநேரம், 20ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும், புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதிலும் அரசாங்கம் தீவிரம் காட்டிவருகின்றது. புதிய அரசியலமைப்புக்கான நிபுணர் குழுவையும் அரசாங்கம் நியமித்துள்ளது. வரப்போகும் புதிய அரசமைப்பிலும் எவ்வாறான சட்டங்களை அரசாங்கம் இயற்றப்போகின்றது என்பதும் அனைவரினதும் ஐயமாகவும் அமைந்துள்ளது.

நாட்டின் முன்னேற்றத்திற்கும் சாமானிய மக்களின் ஜனநாயகத்தைக் காப்பற்றக்கூடிய வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படவேண்டும். இல்லையெனில், மரத்தில் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல் 20ஆவது திருத்தச்சட்டத்தை விட, புதிய அரசியலமைப்பும் அமைந்துவிடும் என்பது நிதர்சனம்.



## கண்டதும்... கேட்டதும்... பார்த்ததும்...!



*ஏதாவது ஒரு மாற்றம் வரும் என்றுதான் 19ஆவது திருத்தத்திற்கு ஆதரவளித்தோம் என்று எம்.பி.க்கள் பலர் இப்போது சொல்வதை ஊடகங்களில் பார்த்து கேட்கக் கூடியதாக இருக்கிறது.*

*இப்போது 20ஆவது திருத்தத்தை ஆதரித்தபின்னர் கூட ஒருகாலத்தில் இவர்கள் இப்படித்தான் கூறுவார்கள். கட்சி எடுத்த முடிவுக்குக் கட்டுப்பட்டேன் என்றும் மேலதிகமாகச் சொல்வார்கள். அரசியல் என்பது இதுதான்.*

*தேர்தலுக்கு முன் நாங்கள் சொல்வதையெல்லாம் அவர்கள் கேட்பார்கள். தேர்தலுக்குப் பின் அவர்கள் சொல்வதையெல்லாம் நாங்கள் கேட்டாக வேண்டும். அயோக்கியர்களின் கடைசி புகலிடம் அரசியல் என்பது சரிதான் போலும்...!*

- சிவா -
siva@liberty.lk




# மன்னர் ஆட்சியை நோக்கியதாக இலங்கையின் மாற்றம் இடம்பெறுகிறது

## *சுட்டிக்காட்டுகிறார் கஜதீபன்!*



மன்னர் ஆட்சியை நோக்கியதாக இலங்கையின் அரசமைப்பு மாற்றமடைகின்றதா என்ற அச்சம் இன்று எம்மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது - என முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்துள்ளார்.

தென்மராட்சியின் விடத்தற்பளை கிராமத்தில் இடம்பெற்ற மக்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தலின் பின்னர் எது நடந்துவிடக்கூடாது என்று நாங்கள் மக்களை திரும்பத் திரும்ப எச்சரித்தோமோ அதுதான் இன்று வேகமாக இடம்பெற ஆரம்பித்துள்ளது. எமது மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தண்டிப்பதாக நினைத்து தமிழ்த் தேசியத்துக்கு விரோதமான சிங்கள தேசியக் கட்சிகளின் முகவர்களுக்கும் வாக்களித்தனால்தான் தமிழ் மக்கள் பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய அபாயகரமான நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த தேர்தலின் நான் தோற்றுப்போகலாம், ஆனால், நாங்கள் தோற்றுப்போகக்கூடாது என்று மக்களுக்கு திரும்பத் திரும்பச் சொன்னோம். அதை மக்கள் பெரிதும் பொருட்படுத்தவில்லை. ஏன் நாம் இதைச் சொன்னோம் என்பதை எமது மக்கள் இன்று புரிந்துகொண்டிருப்பார்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ தமது தந்திரோபாயமான செயற்பாட்டால் வடக்கு, கிழக்கில் தமது சிங்களக் கட்சிகள் சார்ந்த வேட்பாளர்கள் வெற்றிபெற்றுள்ளார்கள் என்று பகிரங்கமாகவே கூறியுள்ளார்.

அதுமட்டுமன்றி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் அல்ல. அவர்களோடு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக பேசவேண்டிய தேவை இல்லை என்றும் அரசின் முக்கியஸ்தர்களான ஜீ.எல்.பீரிஸ் போன்றவர்கள் கருத்துகளை வெளியிடத் தொடங்கிவிட்டனர்.

சரி தவறுகளுக்கப்பால் வடக்கு, கிழக்கில் பெரும்பான்மைப் பலத்தோடு உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே கண்டுகொள்ளக்கூடாதென்றால் ஏனைய தமிழ்ப் பிரதிநிதிகளின் நிலைமை எவ்வாறிருக்கும் என்பது நாம் சொல்லித்தான் எமது மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்றில்லை.

நடைபெற்ற தேர்தலில் கோட்டபாய அரசு பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியமைக்கும். ஆகவே, தமிழர்களாகிய நாம் அனைவரும் ஓர் அணியில் ஒற்றுமைப்பட்டேயாகவேண்டும் என்பதை தேர்தல் காலங்களில் மக்களிடம் வேண்டுகோள் விடுத்தோம்.

அதை மக்கள் பொருட்படுத்தவில்லை. அதன் விளைவுகள்தான் இவையெல்லாம். ஆட்சியிலிருப்பவர்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு தமது தேவைகளுக்கேற்றால்போல் அரசியலமைப்பை மாற்ற ஆரம்பித்துள்ளனர். இது ஓர் ஆரம்பம்தான். இதன் தொடர்ச்சி தமிழ் மக்களை எவ்வாறெல்லாம் கூறு போடும் என்பது நாம் சொல்லித்தான் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்றில்லை.

எனவேதான், நாங்கள் எமது மக்களிடம் மீண்டும் உரிமையோடு கேட்கின்றோம். எங்களைச் சார்ந்தவர்களின் தேர்தலுக்கு முந்தையகால கருத்துகள் மீது உங்களில் யாருக்காவது அதிருப்திகள் இருந்திருக்குமேயானால், அவற்றையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டு இன்றைய நிலையில் இனத்தின் நன்மை கருதி தேர்தல்களில் எப்படி உழைத்தீர்களோ அதைவிட அதிக உழைப்பைக் கொடுக்க முன்வாருங்கள் - என அறைகூவல் விடுத்துள்ளார்.

# கிளிநொச்சியில் அரியவகை வெள்ளை இன நாவல் மரம்!

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் உழவனூர் கிராமத்தில் தனியார் ஒருவரின் காணியில் அரியவகை வெள்ளை இன நாவல் இனம் காணப்பட்டுள்ளது.

உழவனூர் கிராமத்தில் வசிக்கும் வல்லிபுரம் இராஜேந்திரம் என்பவரின் காணியில் குறித்த வெள்ளை இன நாவல் மரம் இனம் காணப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை தனது காணியிலுள்ள தோட்டக் கிணற்றை துப்புரவுசெய்யும் பணியின்போது குறித்த நாவல் மரத்தின் பழங்கள் வித்தியாசமாக இருப்பதை அவதானித்த அவர், அதனை பறித்து சாப்பிட்டபோது அவை நன்கு பழுத்த நாவல் பழங்களாக காணப்பட்டுள்ளன.

நாவல் மரம், அதன் தோற்றம் என்பன வழமையான நாவல் மரம் போன்றே காணப்படுகின்றன. காய்களும் வழமையான நாவல் காய்கள் போன்றே உள்ளன. ஆனால், பழம் மாத்திரம் வெள்ளை நிறமாக – அதாவது நெல்லிக்காய் நிறத்தில் காணப்படுகின்றது. பழத்தின் சுவையும் வழமையான பழத்திலிருந்து வேறுபடுகிறது.

குறித்த பிரதேசத்திலிருந்து சுமார் ஐந்து கிலோமீற்றர் தொலைவில் சுண்டிக்குளம் பறவைகள் சரணலாயம் காணப்படுகிறது.



எனவே, சரணலாயத்திற்கு அவ்வவ்போது பருவகால பறவைகள் வந்துபோவது வழமை. அங்கு வருகின்ற பருவகால பறவைகள் சில உழவனூர் கிராமத்தில் இவரது காணியின் அருகிலுள்ள சிறிய நீர்த்தேக்கத்திற்குள் காணப்படும் மரங்களில் இரவில் தங்குவது வழமை. எனவே, அவ்வாறு வருகை தந்த பருவகால பறவைகளின் எச்சங்களால் குறித்த வெள்ளை இன நாவல் இங்கு உருவாகியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

குறிப்பாக, இந்தியாவின் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் காணப்படுகின்றது எனவும் கூறப்படுகிறது. வழமையான நாவல் பழத்தில் காணப்படும் மருத்துவக் குணங்களை விட இதில் அதிகளவான மருத்துவக் குணங்கள் காணப்படுகின்றன எனவும் கூறப்படுகிறது.

# வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த சொகுசு பஸ் விபத்து:

## *10இற்கும் மேற்பட்டவர்கள் காயம்!*



வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கி நேற்று முன்தினம் பயணித்த சொகுசு பஸ் சாலியவெவ பகுதியில் விபத்துக்குள்ளானதில் 10இற்கும் மேற்பட்ட பயணிகள் சிறுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர். வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்திற்கு சொந்தமான பயணிகள் சொகுசு பஸ் வவுனியா புதிய பஸ் நிலையத்திலிருந்து கொழும்பு நோக்கி நேற்று முன்தினம் பயணத்தை ஆரம்பித்தது. அநுராதபுரம் – புத்தளம் பாதையூடாக கொழும்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த சமயத்தில் நேற்று முன்தினம் சாலியவெவ பாடசாலைக்கு அருகே பஸ் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து விபத்துக்குள்ளாகியது. அதன்பின்னர் பஸ்ஸில் பயணித்த பயணிகள் அனைவரும் அவசர பாதையூடாக பஸ்ஸிலிருந்து வெளியேறினார்கள்.

இவ்விபத்தில் 10இற்கும் மேற்பட்ட பயணிகள் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளதாக தெரியவருகின்றது. அத்துடன், மழை காரணமாகவே இவ்விபத்து இடம்பெற்றதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

DREAM11 IPL

# 2020 SEASON SCHEDULE

IPLT20.COM

| MATCH DAY | MATCH NO. | DAY | DATE | IST | UAE | VENUE | HOME | AWAY |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | SAT | 19-SEP-20 | 7:30PM | 6:00PM | ABU DHABI | MUMBAI INDIANS | CHENNAI SUPER KINGS |
| 2 | 2 | SUN | 20-SEP-20 | 7:30PM | 6:00PM | DUBAI | DELHI CAPITALS | KINGS XI PUNJAB |
| 3 | 3 | MON | 21-SEP-20 | 7:30PM | 6:00PM | DUBAI | SUNRISERS HYDERABAD | ROYAL CHALLENGERS BANGALORE |
| 4 | 4 | TUE | 22-SEP-20 | 7:30PM | 6:00PM | SHARJAH | RAJASTHAN ROYALS | CHENNAI SUPER KINGS |
| 5 | 5 | WED | 23-SEP-20 | 7:30PM | 6:00PM | ABU DHABI | KOLKATA KNIGHT RIDERS | MUMBAI INDIANS |
| 6 | 6 | THU | 24-SEP-20 | 7:30PM | 6:00PM | DUBAI | KINGS XI PUNJAB | ROYAL CHALLENGERS BANGALORE |
| 7 | 7 | FRI | 25-SEP-20 | 7:30PM | 6:00PM | DUBAI | CHENNAI SUPER KINGS | DELHI CAPITALS |
| 8 | 8 | SAT | 26-SEP-20 | 7:30PM | 6:00PM | ABU DHABI | KOLKATA KNIGHT RIDERS | SUNRISERS HYDERABAD |
| 9 | 9 | SUN | 27-SEP-20 | 7:30PM | 6:00PM | SHARJAH | RAJASTHAN ROYALS | KINGS XI PUNJAB |
| 10 | 10 | MON | 28-SEP-20 | 7:30PM | 6:00PM | DUBAI | ROYAL CHALLENGERS BANGALORE | MUMBAI INDIANS |
| 11 | 11 | TUE | 29-SEP-20 | 7:30PM | 6:00PM | ABU DHABI | DELHI CAPITALS | SUNRISERS HYDERABAD |
| 12 | 12 | WED | 30-SEP-20 | 7:30PM | 6:00PM | DUBAI | RAJASTHAN ROYALS | KOLKATA KNIGHT RIDERS |
| 13 | 13 | THU | 1-OCT-20 | 7:30PM | 6:00PM | ABU DHABI | KINGS XI PUNJAB | MUMBAI INDIANS |
| 14 | 14 | FRI | 2-OCT-20 | 7:30PM | 6:00PM | DUBAI | CHENNAI SUPER KINGS | SUNRISERS HYDERABAD |
| 15 | 15 | SAT | 3-OCT-20 | 3:30PM | 2:00PM | ABU DHABI | ROYAL CHALLENGERS BANGALORE | RAJASTHAN ROYALS |
| 15 | 16 | SAT | 3-OCT-20 | 7:30PM | 6:00PM | SHARJAH | DELHI CAPITALS | KOLKATA KNIGHT RIDERS |
| 16 | 17 | SUN | 4-OCT-20 | 3:30PM | 2:00PM | SHARJAH | MUMBAI INDIANS | SUNRISERS HYDERABAD |
| 16 | 18 | SUN | 4-OCT-20 | 7:30PM | 6:00PM | DUBAI | KINGS XI PUNJAB | CHENNAI SUPER KINGS |
| 17 | 19 | MON | 5-OCT-20 | 7:30PM | 6:00PM | DUBAI | ROYAL CHALLENGERS BANGALORE | DELHI CAPITALS |
| 18 | 20 | TUE | 6-OCT-20 | 7:30PM | 6:00PM | ABU DHABI | MUMBAI INDIANS | RAJASTHAN ROYALS |
| 19 | 21 | WED | 7-OCT-20 | 7:30PM | 6:00PM | ABU DHABI | KOLKATA KNIGHT RIDERS | CHENNAI SUPER KINGS |
| 20 | 22 | THU | 8-OCT-20 | 7:30PM | 6:00PM | DUBAI | SUNRISERS HYDERABAD | KINGS XI PUNJAB |
| 21 | 23 | FRI | 9-OCT-20 | 7:30PM | 6:00PM | SHARJAH | RAJASTHAN ROYALS | DELHI CAPITALS |
| 22 | 24 | SAT | 10-OCT-20 | 3:30PM | 2:00PM | ABU DHABI | KINGS XI PUNJAB | KOLKATA KNIGHT RIDERS |
| 22 | 25 | SAT | 10-OCT-20 | 7:30PM | 6:00PM | DUBAI | CHENNAI SUPER KINGS | ROYAL CHALLENGERS BANGALORE |
| 23 | 26 | SUN | 11-OCT-20 | 3:30PM | 2:00PM | DUBAI | SUNRISERS HYDERABAD | RAJASTHAN ROYALS |
| 23 | 27 | SUN | 11-OCT-20 | 7:30PM | 6:00PM | ABU DHABI | MUMBAI INDIANS | DELHI CAPITALS |
| 24 | 28 | MON | 12-OCT-20 | 7:30PM | 6:00PM | SHARJAH | ROYAL CHALLENGERS BANGALORE | KOLKATA KNIGHT RIDERS |

Please note that this schedule may be subject to change for any reason as may be required at the sole discretion of BCCI

DREAM11 IPL

2020 SEASON SCHEDULE

IPLT20.COM

| MATCH DAY | MATCH NO. | DAY | DATE | IST | UAE | VENUE | HOME | AWAY |
|---|---|---|---|---|---|---|---|---|
| 25 | 29 | TUE | 13-OCT-20 | 7:30PM | 6:00PM | DUBAI | SUNRISERS HYDERABAD | CHENNAI SUPER KINGS |
| 26 | 30 | WED | 14-OCT-20 | 7:30PM | 6:00PM | DUBAI | DELHI CAPITALS | RAJASTHAN ROYALS |
| 27 | 31 | THU | 15-OCT-20 | 7:30PM | 6:00PM | SHARJAH | ROYAL CHALLENGERS BANGALORE | KINGS XI PUNJAB |
| 28 | 32 | FRI | 16-OCT-20 | 7:30PM | 6:00PM | ABU DHABI | MUMBAI INDIANS | KOLKATA KNIGHT RIDERS |
| 29 | 33 | SAT | 17-OCT-20 | 3:30PM | 2:00PM | DUBAI | RAJASTHAN ROYALS | ROYAL CHALLENGERS BANGALORE |
| 29 | 34 | SAT | 17-OCT-20 | 7:30PM | 6:00PM | SHARJAH | DELHI CAPITALS | CHENNAI SUPER KINGS |
| 30 | 35 | SUN | 18-OCT-20 | 3:30PM | 2:00PM | ABU DHABI | SUNRISERS HYDERABAD | KOLKATA KNIGHT RIDERS |
| 30 | 36 | SUN | 18-OCT-20 | 7:30PM | 6:00PM | DUBAI | MUMBAI INDIANS | KINGS XI PUNJAB |
| 31 | 37 | MON | 19-OCT-20 | 7:30PM | 6:00PM | ABU DHABI | CHENNAI SUPER KINGS | RAJASTHAN ROYALS |
| 32 | 38 | TUE | 20-OCT-20 | 7:30PM | 6:00PM | DUBAI | KINGS XI PUNJAB | DELHI CAPITALS |
| 33 | 39 | WED | 21-OCT-20 | 7:30PM | 6:00PM | ABU DHABI | KOLKATA KNIGHT RIDERS | ROYAL CHALLENGERS BANGALORE |
| 34 | 40 | THU | 22-OCT-20 | 7:30PM | 6:00PM | DUBAI | RAJASTHAN ROYALS | SUNRISERS HYDERABAD |
| 35 | 41 | FRI | 23-OCT-20 | 7:30PM | 6:00PM | SHARJAH | CHENNAI SUPER KINGS | MUMBAI INDIANS |
| 36 | 42 | SAT | 24-OCT-20 | 3:30PM | 2:00PM | ABU DHABI | KOLKATA KNIGHT RIDERS | DELHI CAPITALS |
| 36 | 43 | SAT | 24-OCT-20 | 7:30PM | 6:00PM | DUBAI | KINGS XI PUNJAB | SUNRISERS HYDERABAD |
| 37 | 44 | SUN | 25-OCT-20 | 3:30PM | 2:00PM | DUBAI | ROYAL CHALLENGERS BANGALORE | CHENNAI SUPER KINGS |
| 37 | 45 | SUN | 25-OCT-20 | 7:30PM | 6:00PM | ABU DHABI | RAJASTHAN ROYALS | MUMBAI INDIANS |
| 38 | 46 | MON | 26-OCT-20 | 7:30PM | 6:00PM | SHARJAH | KOLKATA KNIGHT RIDERS | KINGS XI PUNJAB |
| 39 | 47 | TUE | 27-OCT-20 | 7:30PM | 6:00PM | DUBAI | SUNRISERS HYDERABAD | DELHI CAPITALS |
| 40 | 48 | WED | 28-OCT-20 | 7:30PM | 6:00PM | ABU DHABI | MUMBAI INDIANS | ROYAL CHALLENGERS BANGALORE |
| 41 | 49 | THU | 29-OCT-20 | 7:30PM | 6:00PM | DUBAI | CHENNAI SUPER KINGS | KOLKATA KNIGHT RIDERS |
| 42 | 50 | FRI | 30-OCT-20 | 7:30PM | 6:00PM | ABU DHABI | KINGS XI PUNJAB | RAJASTHAN ROYALS |
| 43 | 51 | SAT | 31-OCT-20 | 3:30PM | 2:00PM | DUBAI | DELHI CAPITALS | MUMBAI INDIANS |
| 43 | 52 | SAT | 31-OCT-20 | 7:30PM | 6:00PM | SHARJAH | ROYAL CHALLENGERS BANGALORE | SUNRISERS HYDERABAD |
| 44 | 53 | SUN | 1-NOV-20 | 3:30PM | 2:00PM | ABU DHABI | CHENNAI SUPER KINGS | KINGS XI PUNJAB |
| 44 | 54 | SUN | 1-NOV-20 | 7:30PM | 6:00PM | DUBAI | KOLKATA KNIGHT RIDERS | RAJASTHAN ROYALS |
| 45 | 55 | MON | 2-NOV-20 | 7:30PM | 6:00PM | ABU DHABI | DELHI CAPITALS | ROYAL CHALLENGERS BANGALORE |
| 46 | 56 | TUE | 3-NOV-20 | 7:30PM | 6:00PM | SHARJAH | SUNRISERS HYDERABAD | MUMBAI INDIANS |

தற்போது 56 லீக் போட்டிகளுக்குமான அட்டவணையே வெளியிடப்பட்டிருக்கின்றன. ப்ளே ஓப் சுற்று மற்றும் இறுதிப்போட்டி என்பவற்றுக்கான போட்டி அட்டவணை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையால் விரைவில் வெளியிடப்படும்.

# நூரளையில் தனிமைப்படுத்தலில் இருந்தவர் திடீர் உயிரிழப்பு

## மரணம் குறித்த விசாரணைகள் முன்னெடுப்பு

(நுவரெலியா)

நுவரெலியாவில் சுற்றுலா விடுதியில் தனிமைப்படுத்தலில் இருந்த நபரொருவர் உயிரிழந்துள்ளார். நுவரெலியா தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்த 56 வயதுடைய சுப்ரமணியம் ஆனந்தகுமார் என்பவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் நுவரெலியா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து இலங்கைக்கு வருகை தந்த இவர், தனியார் நிறுவனமொன்றில் கடமையாற்றியவர் என்பதுடன், வெளிநாட்டிலிருந்து வருகை தந்ததன் காரணமாக இவர் நுவரெலியாவில் அமைந்துள்ள சுற்றுலா விடுதியொன்றில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

இது தொடர்பாக தெரியவருவதாவது;

ஐக்கிய அரபு இராச்சியத்தில் தனியார் நிறுவனத்தில் சேவையாற்றியபோது குறித்த நபருக்கு, ஒருவகை வைரஸ் உடம்பில் பாதிக்கப்பட்டிருந்ததுடன், நீரிழிவு நோயினாலும் பாதிக்கப்பட்டிருந்தார். இந்நிலையிலேயே இவர் கடந்த முதலாம் திகதி நாடு திரும்பியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து நுவரெலியாவில் சுற்றுலா விடுதியொன்றில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் இவருக்கு சுகவீனம் ஏற்படவே, கடந்த இரண்டாம் திகதி நுவரெலியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே, கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இவர் உயிரிழந்துள்ளார்.



இவருக்கு கொரோனா தொற்று தொடர்பான எவ்விதமான அறிகுறியும் இல்லை என வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளதுடன், இவருடைய உடலில் வைரஸ் பரவல் மற்றும் நீரிழிவு நோயின் காரணமாகவே உயிரிழந்துள்ளதாகவும் வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

இவருடைய சொந்த இடம் கொழும்பு என்ற போதிலும் இவருடைய உடல் நேற்று காலை நுவரெலியா மாநகர சபை பொதுமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கடந்த மாதம் 31ஆம் திகதியிலிருந்து இம்மாதம் முதலாம் திகதி வரையில் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து இலங்கைக்கு வருகை தந்த 389 பேர், நுவரெலியாவிலுள்ள மூன்று சுற்றுலா விடுதிகளில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

அதில் இருவருக்கு PCR பரிசோதனைகளின் பின்னர் கொரோனா தொற்று உறுதிசெய்யப் பட்டதையடுத்து அவர்களிருவரும் அங்கொடை தொற்றுநோயியல் பிரிவு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இருவேறு இடங்களில் குளவித் தாக்குதலுக்குள்ளான தொழிலாளர்கள் 12 பேர் வைத்தியசாலையில் அனுமதி

(ஹட்டன்)

இருவேறு இடங்களில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் 12 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.



ஹட்டன், லெதண்டி தோட்டம் புரொடக் பிரிவில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த தொழிலாளர்கள் 8 பேரும், மஸ்கெலியா - சாமிமலை, ஓல்டன் கிங்கோரா தோட்டத்தில் தேயிலை மலையில் பணியிலிருந்த 4 தொழிலாளர்களும் இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற் றுள்ளது. ஹட்டன், லெதண்டி தோட்டம் புரொடக் பிரிவில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த தொழிலாளர்கள் 8 பேரும் டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏழாம் இலக்க தேயிலை மலையில் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த பெண் தொழிலாளர்கள் மீதே மரத்திலிருந்த குளவிக்கூடு கலைந்து வந்து இவ்வாறு தாக்கியுள்ளது.

6 பெண்களும் 2 ஆண்களுமாக 8 பேர் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ள நிலையில், நால்வர் சிகிச்சையின் பின் வீடு திரும்பியுள்ளதுடன், நால்வர் தொடர்ந்து சிகிச்சைபெற்று வருகின்றனர். இதில் இருவர் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்,

இதேவேளை, மஸ்கெலியா - சாமிமலை, ஓல்டன் கிங்கோரா தோட்டத்தில் தேயிலை மலையில் பணியிலிருந்த 4 தொழிலாளர்களும் குளவிக்கொட்டுக்கு இலக்காகி மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் ஒருவர் சிகிச்சையின் பின் வீடு திரும்பியுள்ளதுடன், மூவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.




# ஜீப் – மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 21 வயது இளைஞன் பலி!

(பலாங்கொடை)

கொழும்பு - எம்பிலிபிட்டிய பிரதான வீதி யில் காவத்த மாதம்ப சந்தியில் ஜீப் ஒன்று மோட்டார் சைக்கிளில் மோதியதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த 21 வயதுடைய இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.



நேற்று மாலை 6 மணியளவிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. ஜீப் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மறுபக்கத்தில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளில் மோதியதுடன், ஜீப் சுமார் 15 அடி பள்ளத் துக்குள் பாய்ந்தது.

ஜீப் எம்பிலிபிட்டிய பிரதேசத்திலிருந்து பெல்மடுல்ல பிரதேசத்தை நோக்கி சென்றுள்ள தாகவும் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் பெல்மடுல்ல பிரதேசத்தை நோக்கி சரியான பக்கத்தில் சென்றுள்ளதாகவும் காவத்தை பொலிஸார் செய்த விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

குறித்த விபத்தில் காயமடைந்த இளைஞனை காவத்தை வைத்தியசாலைக்கு அழைத்து செல்லும் வழியில் இளைஞன் உயிரிழந்ததாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்த 21 வயதுடைய காவிந்த லக்ஷான் என்னும் இளைஞன் இறக்குவானை, கெந்தபோல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

சந்தேகநபரான ஜீப்பின் சாரதி, காவத்தை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளை காவத்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சீரற்ற காலநிலையால் மலையகத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(ஹட்டன்)

கடும் காற்றுடன் கூடிய அடைமழையால் ஹட்டன், டிக்கோயா மெனிக்வத்த 2ஆம் பிரிவில் நேற்று முன்தினம் 11 மணியளவில் பாரிய மரமொன்று மின் இணைப்புகள் மீது முறிந்து வீழ்ந்ததால் அப்பகுதிக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் 105 குடும்பங்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.







நாட்டில் பல பகுதிகளிலும் சீரற்ற காலநிலை நிலவிவருகின்றது. மலைநாட்டிலும் கடும் காற்றுடன் அடைமழை பெய்துவருகின்றது. இந்நிலையில், நேற்று முன்தினம் ஹட்டன், டிக்கோயா பகுதிகளில் கடும் காற்று வீசியுள்ளது.

காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்பட்டதால் மாணிக்கவத்தை 2ஆம் பிரிவிலுள்ள மரமொன்று முறிந்து, மின் கம்பம் மீது விழுந்துள்ளது. இதனால் மின் கம்பிகள் எல்லாம் அறுந்து வீதியில் விழுந்துள்ளன. ஏனைய சில மின்கம்பங்களும் சரிந்துள்ளன.

இது தொடர்பில் கினிகத்தேன மின்சார சபைக்கு அறிவித்தும் இதுவரையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என ஊர் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மின்கம்பங்கள் உடைந்துவிழும் அபாயம் இருப்பதால் கொங்கிறீட் தூண்களை நடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தோட்ட மக்கள் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரிடமும் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். ஆனாலும், இது தொடர்பில் எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இழுத்தடிப்புகளுக்கு மத்தியில் தற்போது கொங்கிறீட் மின்கம்பங்கள் கொண்டு வரப்பட்டிருந்தாலும் அவற்றை நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஹட்டன் - நோட்டன் பிரதான வீதியில் மின்கம்பமொன்று உடைந்து வீழ்ந் துள்ளமையால் அவ்வீதியின் போக்கு வரத்து தடைப்பட்டுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்,

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா வனராஜா உப மின் உற்பத்தி நிலையத்திற்கு அருகிலே நேற்றுக் காலை மின்கம்பம் உடைந்து வீதியின் குறுக்கே வீழ்ந்துள்ளது.

மின்கம்பமொன்று உடைந்து வீழ்ந்துள்ளமையால் ஹட்டன் நோட்டன், ஒஸ்போன், லக்ஷபான பகுதிகளுக்கான போக்கு வரத்தும் தடைப்பட்டுள்ளது, ஹட்டன் பொலிஸாரும்,நோர்வூட் வீதி அபிவிருத்தி அதிகாரபை ஊழியர்களும் மின்கம்பத்தை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

# கேரள கஞ்சாவுடன் இளைஞர்கள் இருவர் கைது!

(கம்பளை)

கண்டி, கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போத்தலப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை போதைப்பொருள் பொலிஸ் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது, கேரளா கஞ்சாவை விற்பனைசெய்வதற்காக வைத்திருந்த 40இற்கும் மேற்பட்ட கேரள கஞ்சா பொதிகள் மற்றும் பொதிசெய்ய வைத்திருந்த கேரள கஞ்சாவுடன் இளைஞர்கள் இருவரையும் பொலிஸார் கைதுசெய்தனர்.



பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து இந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது குறித்த நபர்கள் நீண்ட நாட்களாக இரகசியமாக கேரள கஞ்சாவை விற்பனைசெய்து வந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கேரள கஞ்சா பொதியொன்று ஆயிரம் ரூபாவுக்கு விற்பனைசெய்யப்பட்டு வந்ததாக கைதுசெய்யப்பட்ட நபர்களிடம் மேற்கொள் ளப்பட்ட விசாரணையின் மூலம் தெரியவந் துள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இரத்தினபுரி மாவட்ட மூன்று தமிழ்ப் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்த நடவடிக்கை

## முதலாவது ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இறுதித் தீர்மானம்

(இரத்தினபுரி)

இரத்தினபுரி மாவட்டத்தின் முதலாவது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் புதிய இணைத் தலைவர்களான சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மற்றும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவல ஆகியோரின் தலைமையில் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.



இரத்தினபுரி மாவட்டத்தில் அதிக மழை பெய்யும்போது இரத்தினபுரி தொடக் கம் பாணந்துறை வரையிலான தாழ்நிலப் பிரதேசங்கள் நீரில் மூழ்குவதை கட்டுப்படுத் துவதற்கு புதிய திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்கான தீர்மானம் இக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

2017ஆம் ஆண்டு களுகங்கை நீரினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக வீடுகள், கடைகள், வீதிகள், பாலங்கள் மற்றும் பல்வேறு பொருட்கள் சேதத்துக்குள்ளாகின. இதன் காரணமாக இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ள தாக தெரியவருகிறது.

**இரத்தினபுரி நகர் தொழில் திணைக்களத்தை அவிசாவளைக்கு கொண்டுசெல்வதற்கு எதிர்ப்பு!**

இரத்தினபுரி நகரில் அமைந்துள்ள தொழில் திணைக்களம் திடீரென அவிசாவளைக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளமை குறித்து ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

பொதுமக்களுக்கு சேவை செய்துவரும் தொழில் திணைக்களம் அவிசாவளைக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது மக்களுக்கு அநீதி விளைவிக்கும் செயலாகும்.

எனவே, இவ்விடயம் குறித்து இரத்தினபுரி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரான இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவல மற்றும் அமைச்சர்களான பவித்ரா வன்னியராச்சி, வாசுதேவ நாணயக்கார, இராஜாங்க அமைச் சர் ஜானக்க வக்கும்புர உட்பட மாவட்டத்தின் ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்றைய தினம் தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, பிரதமர் மற் றும் ஜனாதிபதி ஆகியோரை சந்தித்து கலந்துரை யாடவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

**இரத்தினபுரி மாவட்டத்தில் மூன்று தமிழ்ப் பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்படும்**

இரத்தினபுரி மாவட்டத்தில் மூன்று தமிழ்ப் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரத்தினபுரி மாவட்டத்தில் இறக்குவானை சென். ஜோன்ஸ் தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை கனகநாயகம் தமிழ் மகா வித்தியாலயம், எஹலியகொடை அல்-அல்லக்சா மகாவித்தியாலயம் ஆகிய மூன்று தமிழ்ப் பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் கணிதம், விஞ்ஞானம் உயர் தர தமிழ்ப் பாடசாலை இல்லாத காரணத்தால் இம்மாவட்டத்தில் தமிழ் மாணவர்கள் வெளிமாவட்டத்திற்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதை கவனத் திற்கொண்டு இரத்தினபுரி மாவட்டத்தில் மேற்படி மூன்று தமிழ்ப் பாடசாலைகள் தேசிய பாட சாலையாக தரம் உயர்த்த தீர்மானம் எடுக் கப்பட்டுள்ளது.

இது குறித்து இரத்தினபுரி மாவட்ட அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கள் கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவர உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தோட்ட நிர்வாகத்தால் தொடர்ந்து மூடப்பட்டுள்ள பலாங்கொடை நண் பேரியல் தோட்ட வீதியை பொதுமக்களின் நலன் கருதி திறப்பதற்கு மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மற்றும் இரத்தினபுரி மாவட்ட அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது குறித்து பொலிஸ் உயரதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

# பதுளை – தெமோதரை சௌதம் தோட்ட மேற்பிரிவு குளத்திலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்பு

(பதுளை)

பதுளை தெமோதரை சௌதம் தோட்ட மேற்பிரிவில் அமைந்துள்ள குளத்தில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



தெமோதரை சௌதம் தோட்ட மேற்பிரிவில் 5ஆம் கட்டையில் அமைந்துள்ள குளத்தில் நேற்று ஆணொருவரின் சடலம் மிதப்பதைக் கண்டு பிரதேச மக்களால் எல்ல பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து சடலம் எல்ல பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் சௌதம் மேற்பிரிவைச் சேர்ந்த 74 வயதையுடைய பெரியம்மன் பெரியான் என எல்ல பொலிஸார் தெரிவிப்பதுடன், பிரேத பரிசோதனைக்காக சடலம் பதுளை மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் எல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# யுத்தத்தின் இறுதிக் காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் அமைப்பின் 13 ஆயிரம் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்கப்பட்டது!

## அமரர் சந்திரசிறி கஜதீரவுடனான அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார் பிரதமர்




யுத்தம் நிறைவடையும் காலகட்டத்தில் சுமார் 13 ஆயிரம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் புனர்வாழ்வு பெறுவதற்காக அமரர் சந்திரசிறி கஜதீரவிடம் சரணடைந்ததாகவும் அவரது காலத்தில் 13 ஆயிரம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு எவ்வித பிரச்சினைகளுமின்றி விடுவிக்கப்பட்டதாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாத்தறை, உயன்வத்த எச்.கே.தர்மதாச விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமரர் சந்திரசிறி கஜதீரவின் ஆண்டு நினைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் டலஸ் அழகப்பெரும, இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நாடாளுமன்ற உறுப்பினர்களான வீரசுமன வீரசிங்க, நிபுண ரணவக்க, முன்னாள் அமைச்சர் டியூ குணசேகர உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மனித உரிமைகளைப் பாதுகாத்து, உலகின் மிக மோசமான பயங்கரவாதிகளுக்கு புனர்வாழ்வளித்த நாடு என்றவகையில் இலங்கைக்கு உலக நாடுகள் மத்தியில் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக அமைந்துள்ளது. அவை அனைத்துக்கும் அமரர் சந்திரசிறி கஜதீரவின் அரசியல் அறிவு மற்றும் நற்பண்பு என்பனவே காரணமாகும்.

இந்நாட்டின் அரசியல் வரலாறு எனக்கு நினைவுக்கு வருகிறது. இந்நாட்டின் இடதுசாரி அரசியலில் ஒரு முன்னோடி கதாபாத்திரமாக மாத்தறை எஸ்.ஏ.விக்ரமசிங்க விளங்கினார். கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராகவும் எஸ்.ஏ.விக்ரமசிங்க காணப்பட்டார். தெற்கு அரசியலுக்கு எஸ்.ஏ.விக்ரமசிங்கவிடமிருந்து கிடைத்த உத்வேகத்தை ஒருபோதும் மறக்க முடியாது. இன்று நாம் ஆண்டு நினைவு விழா அனுஷ்டிக்கும் சந்திரசிறி கஜதீர, முற்போக்கான அரசியல் தலைவரான விக்ரமசிங்கவின் வழியை பின்பற்றி செயற்பட்ட ஒருவர்.

இன்று அரசியல் புலமை பற்றி நம் நாட்டில் மிகுந்த ஆர்வத்துடன் பேசுகிறார்கள். இருப்பினும், சந்திரசிரி கஜதீர நான்கு அல்லது ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் இருந்தே இந்நாட்டின் புலமைவாய்ந்த அரசியலை பிரதிநிதித்துவம் செய்துவந்தார். அதுமாத்திரமன்றி அவர் பண்புமிகுந்த அரசியலை பிரதிநிதித்துவம் செய்தார். அரசியலில் புலமைத்துவம் மிகவும் முக்கியமானது. கல்வியறிவும் மிக முக்கியமானது. அதுபோன்று சிறந்த பண்பும் அவசியம் என்பதை தற்போதைய தலைமுறையினருக்கு நினைவூட்ட விரும்புகிறேன். அரசியலுக்கு புலமை மற்றும் சிறந்த பண்பு அவசியம் என்பதை சந்திரசிறி கஜதீரவிடமிருந்து இன்றைய அரசியல் உலகிலுள்ளவர்கள் விளங்கிகொள்ள வேண்டும்.

சந்திரசிறி கஜதீர வித்யோதய பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர். பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும்போதுதான் அரசியலில் ஈடுபட ஆரம்பித்தார். பல்கலைக்கழகத்தில் இலங்கை தேசிய மாணவர் சங்கத்தின் பிரதிநிதியாக அரசியலில் நுழைந்து பட்டம் பெற்றார். அதன்பின்னர், ஒரு ஆசிரியராக அரச சேவையில் இணைந்துகொண்டார்.

1988ஆம் ஆண்டு மாத்தறை நகரசபை உறுப்பினராக பொது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்தார். 1994ஆம் ஆண்டு அவர் முதல் முறையாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார். 1994 அரசாங்கம் என்பது 17 ஆண்டுகளாக நீடித்த ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பிய காலப்பகுதியாகும். எங்களுக்கு நினைவிருக்கின்றது. அந்த அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கு எம்மைபோன்றே இடதுசாரி இயக்கத்தின் கம்யூனிஸ்ட் கட்சியும், சமசமாஜ கட்சியும் பாரிய தியாகத்தை செய்திருந்தன. சந்திரசிறி கஜதீர, தீவிர பயங்கரவாதத்தின் மத்தியில் தோட்டாக்களுக்கு மத்தியில் ஜனநாயகத்தைப் பலப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்பட்ட மாத்தறை மாவட்ட பிரதிநிதி என்பதை நினைவூட்ட வேண்டும்.

சந்திரசிறி கஜதீர, புலமை கல்வியறிவு மிகுந்தவர் என்றாலும், அதனை பிரசாரம் செய்யாமல் நாட்டுக்காக செயற்பட்டவர். அதனால்தான் அவருடைய பெயர் எப்போதும் நம் இதயத்தில் நிலைத்திருக்கிறது.

சந்திரசிறி கஜதீர, பதவியை பற்றி சிந்திக்கவில்லை, அவர் எப்போதும் அரசியல் பற்றியே சிந்தித்தார்.

அதற்கு என்னிடம் ஒரு நல்ல உதாரணம் இருக்கிறது. கஜதீர 1994ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார். அதன்பின்னர் அவர் பிரதி அமைச்சராக தெரிவுசெய்யபட்டார். 2001 உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது எமக்கு மாத்தறை நகரசபையில் வெற்றிபெறச் செய்வதற்கு சிறந்த பிரதிநிதியொருவர் தேவைப்பட்டார்.

அதன்போது அவரை நகரமேயர் தேர்தலில் போட்டியிடுமாறு கோரினோம். அவர் வகித்த உறுப்பினர் பதவிகள், அமைச்சுப் பதவிகளைப் பற்றி அவர் சிந்திக்கவில்லை. அவர் அரசியலுக்காக நகரசபை தேர்தலில் போட்டியிட்டு மேயர் பதவியை ஏற்றுக்கொண்டார். அமைச்சுப் பதவியில் இருந்த ஒருவர் அரசியலுக்காக இதுபோன்ற முடிவை எடுப்பது மிகவும் அரிது. அதனால்தான் கஜதீர தனது பதவியைவிட அரசியலைப் பற்றி அதிகம் சிந்தித்தார் என்று நான் கூறுகிறேன். அதன்பிறகு அவர் பொதுத்தேர்தலில் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி மீண்டும் அமைச்சரவை அமைச்சராக பணியாற்றினார்.

சந்திரசிறி கஜதீர அமைச்சரவை அமைச்சராக இருந்தபோது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது, யுத்தம் இடம்பெற்ற காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடன் ஒரு தேசிய அரசாங்கத்தை அமைத்திருந்தோம். அவர் அந்த தேசிய அரசாங்கத்தின் உள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சராக பணியாற்றினார். அவரது அமைச்சராக விளங்கியவர் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வந்து எம்முடன் இணைந்திருந்த உறுப்பினரொருவர். அமைச்சர் களுக்கும் பிரதி அமைச்சர்களுக்கும் இடையே எப்போதும் ஒரு சிறிய பனிப்போர் காணப்படும். அமைச்சர் ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும், பிரதியமைச்சர் மற்றொரு கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துபவராகவும் காணப்படின் அப்போர் மேலும் தீவிரமடையும். இருப்பினும், சந்திரசிறி கஜதீர ஒரு முதிர்ச்சி மிகுந்த மற்றும் அரசியல் ரீதியாக சிந்திக்கக்கூடியவர் என்ற நபராகவும் விளங்கியதால் தனது அமைச்சருடன் எந்த மோதலும் இல்லாமல் மிகச் சிறப்பாக பணியாற்றியது மட்டுமல்லாமல், அவரது அமைச்சரால் பாராட்டப்பட்டார். அவரது, உன்னத தன்மை காரணமாக அவ்வாறு செய்ய முடிந்தது.

யுத்தம் நிறைவடையும் காலத்தின்போது சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சராக அவர் பணியாற்றியிருந்தார். அவரிடம் 13 ஆயிரம் தமிழீழ விடுலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்படுவதற்காக சரணடைந்தனர். அது மிகவும் பொறுப்புடன் நிறைவேற்றவேண்டிய கடமையாக அமைந்தது. அவருடைய காலத்தில் எவ்வித பிரச்சினைகளும் ஏற்படாத வகையில் 13 ஆயிரம் தமிழீழ விடுலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களும் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். உலகின் மிக மோசமான பயங்கரவாதிகளை எவ்வித சிக்கல்களுமின்றி புனர்வாழ்வளித்து மீண்டும் சமூகத்துடன் இணைப்பதற்கு முன்னாள் அமைச்சர் கஜதீரவின் தலைமை மிகவும் முக்கியமானதாக அமைந்தது. அதன் மூலம் மனித உரிமைகளைப் பாதுகாத்து உலகின் மிக மோசமான பயங்கரவாதிகளுக்கு புனர்வாழ்வளித்த நாடு என்றவகையில் இலங்கைக்கு உலகின் மத்தியில் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக அமைந்தது.

அமரர் சந்திரசிறி கஜதீரவின் அரசியல் அறிவு மற்றும் நற்பண்பு என்பன காரணமாகவே அவை அனைத்தையும் மேற்கொள்ள முடியுமானதாக அமைந்தது – என்றார்.

## காளியம்மன் தேவஸ்தானத்தில் ஆபத்தான இரு குளவிக்கூடுகள்!



வவுனியா குருமன்காடு ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தானத்திற்கு தினசரி நூற்றுக்கு மேற்பட்ட பக்த அடியார்கள் சென்று வருகின்றனர்.

ஆலயத்தின் நூழைவாயிலில் அண்மைக்காலமாக ஆபத்தான தேனீ வகையைச் சேர்ந்த பாரிய குளவிகள் வாழ்ந்துவருகின்றன. இதனால் ஆலயத்திற்கு செல்லும் பக்த அடியார்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

இது தொடர்பாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டபோதிலும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

வவுனியா நீர்த்தாங்கி மற்றும் அரச ஊழியர் விடுதியிலும் பாரிய குளவிக்கூடுகள் காணப்படுகின்ற நிலையில், இவை பொதுமக்களுக்கு ஆபத்தை விளைவிக்க வாய்ப்புள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே, ஆபத்து ஏற்படுவதற்கு முன்னர் இதனை அழிப்பதற்கு ஏதுவான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

## ஓமந்தை காட்டுப்பகுதியில் தனித்துவிடப்பட்டிருந்த வாகனம் மீட்பு



வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் தனிமையில் நின்ற டாட்டா ரக வாகனத்தை பொலிஸார் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச்சென்றுள்ளனர்.

பாலமோட்டை - ஈச்சங்குளம் பிரதான வீதியின் காட்டுப்பகுதியில் பல மணிநேரமாக டாட்டா ரக வாகனம் தனிமையில் நிற்பதாக பொதுமகனொருவர் ஓமந்தை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சுகுமார் சுகந்துக்கு தகவல் வழங்கியிருந்தார்.

குறித்த தகவலின் அடிப்படையில் அந்த இடத்திற்கு குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சுகுமார் சுகந் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் டாட்டா ரக வாகனம் நின்ற காட்டுப்பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், டாட்டா ரக வாகனத்தை ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துவந்தனர்.

மரம் கடத்தலுக்கு குறித்த வாகனத்தைப் பயன்படுத்தியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன், வாகனத்தின் உரிமையாளரை அறிவதற்குரிய நடவடிக்கையை தாம் மேற்கொண்டு வருவதாகவும் ஓமந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையினால் ஏற்பாடுசெய்யப்பட்ட கண்டி மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெரும் குடும்பங்களைச் சேர்ந்த விதவைத் தாய்மார்களுக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு தாய்மார்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் நிதி உதவி வழங்கும் நிகழ்வு கண்டியிலுள்ள வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் அந்தப் பேரவையின் தேசியத் தலைவர் ரிஸ்மி எம். சஹீட் தலைமையில் இடம்பெற்றபோது....

## வவுனியா பொது வைத்தியசாலை விடுதி தாதியர் உள்ளக இடமாற்றத்தில் முறைகேடு

வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் கடமையாற்றும் தமக்கு உள்ளக இடமாற்றத்தில் முறைகேடு நிலவி வருவதாக விடுதி தாதியர் விசனம் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலையில் 13 விடுதி தாதியர் கடமையாற்றி வருகின்ற நிலையில், அவர்களுக்காக உள்ளக இடமாற்றம் தொடர்பில் நிர்வாகம் கவனம் செலுத்தியுள்ளது. எனினும், இந்த உள்ளக இடமாற்றத்தில் ஒருசில விடுதி தாதியர்கள், உயரதிகாரிகளின் செல்வாக்குடன் அவர்களது இடமாற்றத்தைத் தவிர்த்துள்ளனர்.

இந்நிலையில், உயரதிகாரிகளின் செல்வாக்கைப் பயன்படுத்தி இடமாற்றத்தைப் பெற்றவர்களை தவிர்த்து மற்றையவர்களை உள்ளக இடமாற்றத்திற்கு செல்லுமாறு நிர்வாகம் அழுத்தம் கொடுப்பதாக தெரிவித்துள்ள விடுதி தாதியர்கள், வைத்தியசாலையில் பணியாற்றும் 13 விடுதி தாதியர்களுக்கும் ஒரே நேரத்தில் உள்ள இடமாற்றம் வழங்கும் பட்சத்தில் தாமும் இடமாற்றத்திற்கு ஆதரவு தெரிவிப்பதாகவும் நிர்வாகத்தின் அழுத்தம் எமக்கு மாத்திரம் அதிகரிக்குமாயின் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் கே.நந்தகுமாரை எமது அலுவலக செய்தியாளர் தொடர்புகொண்டு வினவியபோது,

குறித்த உள்ளக இடமாற்றம் அனைத்து மாவட்ட வைத்தியசாலையிலும் நடைமுறையில் உள்ளதுபோலவே எமது வைத்தியசாலையிலும் நாம் உள்ளக இடமாற்றம் வழங்கியுள்ளோம். நிர்வாகத்தினால் வழங்கப்படும் உள்ளக இடமாற்றத்திற்கு அனைவரும் செயற்பட வேண்டும் எனவும் உயரதிகாரிகளின் சிபாரிசில் இங்கு எவருக்கும் இடமாற்றம் நிறுத்தப்படவில்லையெனவும் தெரிவித்தார்.

## மக்களின் குடும்ப விபரங்களை திரட்டும் பிரதேச செயலகம்

வவுனியா பிரதேச செயலகப் பிரிவினுள் குடும்பங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் அதற்கு பொதுமக்களை ஒத்துழைப்பு வழங்குமாறு வவுனியா பிரதேச செயலாளர் ந.கமலதாசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புதிதாக நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிப் பயிலுனர்கள் மக்களின் வீடுகளுக்கு வருகை தரும் சமயத்தில் அவர்களது அடையாளத்தை உறுதிப்படுத்திக்கொண்டு அவர்களால் கேட்கப்படும் விபரங்களை பூரணமாக வழங்கி ஒத்துழைப்பு வழங்குவதுடன், குடும்ப விபர அட்டை அல்லது அதற்குப் பதிலாக வழங்கப்பட்ட ஆவணம், 2019 வாக்களார் இடாப்பு சிட்டை, குடும்ப அங்கத்தவர்களின் விபரங்கள், பிறப்புச் சான்றிதழ்கள், தேசிய அடையாள அட்டை, திருமணச் சான்றிதழ், தொலைபேசி இலக்கம், கொடுப்பனவு விபரம், காணி ஆவணங்கள் என்பவற்றை பொதுமக்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றுள்ளது.

## கோப்பாய் கோர விபத்தில் வடமராட்சி கல்வி வலய ஓய்வுபெற்ற அதிகாரி பலி!



கோப்பாய் பூதர்மடம் பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் மோதி இடம் பெற்ற விபத்தில் ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகரொருவர் உயிரிழந் தார். இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் அல்வாயைச் சேர்ந்த மகாலிங்கம் வின்சன் கோம கன் (வயது-63) என்ற வடமராட்சி வலயக் கல்வி அலுவலக முன்னாள் சேவைக்கால ஆசிரியர் ஆலோசகரே உயிரிழந்தார்

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றது என்று கோப்பாய் பொலிஸார் யாழ்ப்பா ணம் நீதிவான் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த மூவ ரும் கோப்பாய் ஆதார வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மோட்டார் சைக்கிள்கள் இரண் டும் கடுமையாகச் சேதமடைந் துள்ள அதேவேளை, வீதி விபத் தில் சிக்கியவர்களின் பற்கள் சிதறிக்கிடப்பதை அவதானிக்க முடிந்ததாக செய்தியாளர்கள் தெரிவித் துள்ளனர்.



ஊவா மாகாணத்தின் 13ஆவது ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள, ஏ.ஜே.எம்.முஸம்மில் நேற்று கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர் தேனுக விதான கமகே, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செந்தில் தொண்டமான் உள்ளிட்ட மேலும் பலர் கலந்துகொண்டனர்.

# சுயதொழில் செய்பவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

## இராஜாங்க அமைச்சர் செஹான் தெரிவிப்பு





ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் வழிகாட்டலுக்கமைவாக நாட்டின் அபிவிருத்தியை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு செய்யவேண்டிய சகல நடவடிக்கைகளையும் முறையாக முன்னெடுக்கவேண்டுமென்றும், அதற்காக சமூக பாதுகாப்புச் சபையின் கீழ் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் சுயதொழில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஓய்வூதியத்தை வழங்கும் முறையை மேலும் விஸ்தரிப்பு செய்து அதனை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில், வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரச வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

தனது அமைச்சின்கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சமூக பாதுகாப்பு அமைப்பின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ததன் பின்னர் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அந்த அமைப்பின் அதிகாரிகளைச் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சமூக பாதுகாப்புத் திட்டத்தை எதிர்காலத்தில் மேலும் விஸ்தரிப்பு செய்வதினூடாக சமூக பாதுகாப்பு அமைப்பின் பிரதிபலன்கள் கிடைக்காதவர்களை இந்தத் திட்டத்தில் இணைத்துக்கொள்வதனூடாக சமூக பாதுகாப்புத் திட்டத்தின் பிரதிபலன்களை அநேகமானவர்களுக்கு பெற்றுக்கொடுக்கக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இன்றுமுதல் நாடாளுமன்றக் குழு அறைகளை ஒன்லைன் முறையில் முன்பதிவுசெய்யலாம்

நாடாளுமன்றத்தை டிஜிட்டல் மயப்படுத்தும் நடவடிக்கையின் அடுத்தகட்டமாக குழு அறைகளை ஒன்லைன் முறைமையில் முன்பதிவுசெய்து கொள்வதற்கான வசதி இன்று முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது.

நாடாளுமன்றத்தின் தகவல் முறைமைகள் மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் மஹேஷ் பெரேராவால் இது தொடர்பில் நாடாளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் டிக்கிரி ஜயதிலக்க உள்ளிட்ட நாடாளுமன்ற பணியாளர்களுக்கு நேற்று விளக்கமளிக்கப்பட்டது.

அதற்கமைய, இணைய விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்து படைக்கல சேவிதர் திணைக்களத்துக்கு அனுப்புவதனூடாக நாடாளுமன்றக் குழு அறைகளை முன்பதிவுசெய்ய முடியும். குழுக்கூட்டங்கள், ஆலோசனைக் குழுக்கூட்டங்கள், ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியின் கூட்டங்கள் போன்றவற்றுக்கு நாடாளுமன்றக் குழு அறைகளை ஒதுக்கமுடியும்.

# கொட்டவெஹெர பிரதேசத்தில் சட்டவிரோத துப்பாக்கி மீட்பு!



கொட்டவெஹெர பிரதேசத்தில் உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட துப்பாக்கியொன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உடவலவ பொலிஸ் விசேட அதிரடிப்படை, வெலிஓயா பிரதேசத்தில் முகாமிட்டிருந்த அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய ஹம்பேகமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டவெஹெர பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்தத் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதற்காக துப்பாக்கி ஹம்பேகமுவ பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

# 3 வாள்களுடன் சந்தேகநபரொருவர் கைது!



யாழ்ப்பாணம், வடலியலிப்பு பிரதேசத்தில் 3 வாள்கள், வாள் உறையுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலைவாணர் வீதி, வடலியலிப்பு பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போதே 32 வயதுடைய இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டதோடு, இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பொலிஸ் திணைக்களத்தில் பாதிக்கப்பட்ட 118 பேருக்கு பதவி உயர்வு

(கண்டி)

கடந்த அரசில் ஓய்வுபெற்ற நிலையில் உரிய காலத்துக்குரிய பதவி உயர்வு வழங்கப்படாது பாதிக்கப்பட்ட பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த 118 பேருக்கு புதிதாக பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

பொலிஸ் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ள மேற்படி பதவி உயர்வில் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த 6 தமிழ் - முஸ்லிம் உத்தியோகத்தர்களும் இடம்பெற்றுள்ளனர். கடந்த ஆட்சியில் குறிப்பிட்ட சேவை காலத்தை பூரணப்படுத்தியதும் இயல்பாகவே வழங்கப்படவேண்டிய பதவி உயர்வுகள் பல வழங்கப்படாது தாமதமாகின. சிலர் 60 வயது பூர்த்தியான நிலையில், தமது கட்டாய ஓய்வைப் பெற்றனர். இருப்பினும், குறிப்பிட்ட சேவைகாலத்தைப் பூர்த்திசெய்து சேவையில் தொடர்ந்தும் இருந்தவர்களுக்கு புதிய அரசு பதவி உயர்வுகளை வழங்கியது. ஆனால், குறிப்பிட்ட சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்தும் அன்றைய அரசு இழுத்தடிப்புச் செய்த நிலையில் 60 வயது பூர்த்தியாகி ஓய்வுபெற்ற 118 பேர் பாதிப்படைந்திருந்தனர். அவர்களது விண்ணப்பதை பரிசீலித்த புதிய அரசு அவர்கள் ஓய்வுபெறும் காலத்தைப் பின்தள்ளி பதவி உயர்வுகளை வழங்கியுள்ளது.

பொலிஸ் சார்ஜண்ட்களாக 15 வருட சேவையைப் பூர்த்திசெய்தும் பதவி உயர்வு பெறாத ஓய்வுபெற்ற இரண்டு முஸ்லிம்களுடன் ஒரு தமிழருமாக மூவர் உதவிப் பரிசோதகர்களாகவும், அதேபோல் உரிய சேவை காலத்தைப் பூர்த்திசெய்த இரண்டு முஸ்லிம்களும் ஒரு தமிழருமாக மூவர் பொலிஸ் சார்ஜண்ட் தரத்திற்கும் பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஆணைக்குழுத் தலைவர் உரியவர்களுக்கு அறிவித்துள்ளார்.

## இன்றைய ராசி பலன்கள்

08.09.2020 (செவ்வாய்க்கிழமை)

வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம்
சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

| | |
|---|---|
| மேஷம் - | உதவி |
| ரிஷபம் - | துணிவு |
| மிதுனம் - | தடை |
| கடகம் - | போட்டி |
| சிம்மம் - | நற்செயல் |
| கன்னி - | வாழ்வு |
| துலாம் - | புகழ் |
| விருச்சிகம் - | சினம் |
| தனுசு - | வரவு |
| மகரம் - | ஓய்வு |
| கும்பம் - | புகழ் |
| மீனம் - | மகிழ்ச்சி |

**சுப நேரம்**
காலை: 10.34 -12.04
காலை: 04.45 - 06.15

**இராகு காலம்**
03.04
04.34

**எம கண்டம்**
09.04
10.34









இங்கிரிய, றைகம் மேற்பிரிவு ஸ்ரீ குறிஞ்சி மகாமாரி அம்மன் ஆலயத்தின் கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் ஸ்ரீ குறிஞ்சி மகாமாரி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் நூலின் முதற்பிரதியை தேசமான்ய சிவஸ்ரீ குமார விக்னேஸ்வர சிவாச்சாரியார் வெளியிட, அதனை தேசிய மரபுரிமை, அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பெற்றுக்கொள்வதையும், நூலின் சிறப்புப் பிரதிகளை பெற்றுக்கொண்ட பிரமுகர்களையும் இங்கு காணலாம்.





குருநாகல் ஸ்ரீ கதிரேசன் சுவாமி ஆலயத்தின் 12ஆவது வருடாபிஷேகம் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்றது. அபிஷேகத்தின் பின்னர் சுவாமி நகர்வலம் நடைபெற்றது. (படம் :உடப்பூர்)

# வவுனியா நகரசபை சுகாதார ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

(வவுனியா)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நகரசபை சுகாதார ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டனர்.

சம்பள ஏற்றம் வழங்கப்படாமை, சம்பள மீளாய்வு செய்யப்படாமை, உள்ளக வெற்றிடங்கள் நிரப்பப்படாமை போன்ற கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா நகரசபையின் ஒருதொகுதி சுகாதார ஊழியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

நகரசபை வாயிலில் ஒன்றுகூடிய அவர்கள் பதாகைகளை ஏந்தியவண்ணம் காலை 7 மணிமுதல் தமது போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கும்போது,

வடமாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளிலுள்ள அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகளுக்கமைவாக அனுமதி வழங்கப்பட்டது. குறைந்த கல்வித்தகைமையோடு நிரந்தர நியமனங்களை வழங்கும்படியும், 180 நாட்கள் கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கான அனுமதியும் அரசால் வழங்கப்பட்டது.

இதனை செய்துகொடுக்காமல் திறைசேரி செயலாளரின் கடிதத்தை காரணங்காட்டி எந்தவிதமான நியமனங்களையும் வழங்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமக்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள்.

உண்மையில் ஆளணிக்கான அனுமதி இல்லையென்றால் மட்டுமே திறைசேரியில் ஆளணிக்கான அனுமதி பெறவேண்டும். எனினும், நகர சபையில் ஆளணிக்கான வெற்றிடம் தேவைக்கு அதிகமாக உள்ளது. அதனடிப்படையில் நேர்முகத் தேர்வுகளில் சித்திபெற்றுள்ள 11 ஊழியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கமுடியும்.

மேலும், சம்பள மீளாய்வு என்றபெயரில் ஊழியர்கள் பெற்றுவந்த சம்பளங்களை குறைத்து வழங்கிய நிலையில், இதனை வடமாகாண சபையிடம் தெரிவித்த வேளையில் வடக்கு மாகாண சபையின் 32ஆவது சபை அமர்வில் ஊழியர்களின் பதவி மாற்றத்தின்போது அவர்கள் பெற்றுவந்த சம்பளத்தைக் குறைத்து நிர்ணயித்தமை தவறானது என மாகாண சபையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

அரச நிர்வாக சுற்றறிக்கைகளுக்கமைவாக சம்பள மீளாய்வுகள் குறியீட்டின் அடிப்படையில் செய்து வழங்கப்படவேண்டும் என தேசிய சம்பள பதவியணி ஆணைக்குழு கடிதம் அனுப்பியது. இதனை அடிப்படையாகவைத்து மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோர் பதவிக்குரிய சம்பளக் குறியீட்டு அட்டவணையை கையொப்பத்துடன் வடக்கு மாகாணத்தில் வெளியிட்டது. அதனடிப்படையில் வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் ஊழியர்களுக்கு சம்பள



மீளாய்வுகள் செய்து வழங்கப்பட்டன.

வவுனியா நகர சபை ஊழியர்களுக்கு மாத்திரம் மேற்குறிப்பிட்டதற்கமைவாக சம்பள மீளாய்வு செய்யப்படாமல் உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிரூபம் - 2015 என போலியான சுற்றுநிரூபத்தை தயாரித்து சம்பள மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இவற்றை தேசிய சம்பள பதவியணி ஆணைக்குழுவின் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்த வேளையில் அதனைப் பார்வையிட்ட பணிப்பாளர் வழங்கிய சம்பளங்கள் யாவும் பிழையானது எனக் குறிப்பிட்டுள்ளார். இதனால் ஊழியர்கள் மாதமொன்றுக்கு தமது அடிப்படைச் சம்பளத்திலிருந்து சில தொகையை இழந்துவருகின்றார்கள். அத்துடன், வருடாந்த சம்பள ஏற்றங்களை வழங்குவதற்கான அனுமதி அரசால் வழங்கப்பட்டும் பல வருடங்கள் இடைநிறுத்தப்பட்ட சம்பள ஏற்றங்கள் இன்றுவரை தேக்கநிலையென தெரிவித்து வழங்கப்படாமல் இருக்கிறது.

அத்துடன், ஊழியர்களின் சம்பள மீளாய்வானது 2013ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை செய்யப்படவில்லை. கேட்கும்போதெல்லாம் ஆய்வுசெய்யப்பட்டு வருவதாக தெரியப்படுத்துகின்றார்கள். இரண்டு நாட்களில் செய்யப்படுகின்ற அந்த விடயத்துக்காக 11குழுக்கள் நியமிக்கப்பட்டும் பலன் ஒன்றுமில்லை.

மாகாண சபையின் தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை. நகர சபையின் தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை.

எமது கோரிக்கைக்கமைவாக வடக்கு மாகாண ஊழியர்களின் நலன், சேவைக்காலம் என்பவற்றை கருத்திற்கொண்டு உள்ளக வெற்றிடங்களை வழங்கும்படி முன்னாள் வடக்கு மாகாண ஆளுநரால் சேவைப் பிரமாணக்குறிப்புக்கமைய அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், திணைக்களச் செயலாளர்கள் இன்றுவரை அதனை நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடிக்கின்றார்கள். சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்கமாட்டார் என்ற நிலையில் இன, மத, பேதம், சாதியம் என்ற அடிப்படையில் உள்ளக வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் அதிகாரிகள் செயற்படுவதினால் 2008ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஊழியர்கள் ஏமாற்றப்படுகின்றார்கள். இதனாலேயே ஊழியர்களின் தீர்மானத்திற்கமைவாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது'' - என்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், திலீபன் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

இது தொடர்பாக எதிர்வரும் 12ஆம் திகதி உரிய அதிகாரிகளுடனும், ஊழியர்களுடனும் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டு இதற்கான தீர்வை பெற முயற்சிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் திலீபனால் தெரிவிக்கப்பட்டது.

# இரசாயன பசளைகளால் ஏற்படுகின்ற நோய்த்தாக்கம் பற்றி விவசாயிகளை விழிப்புறச் செய்யவேண்டும்:

## மட்டு. மாவட்ட அதிபர் கலாமதி பத்மராஜா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட விவசாய அபிவிருத்திக் குழுக்கூட்டம், நேற்றுக் காலை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமாகிய திருமதி கலாமதி பத்மராஜா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மத்திய நீரப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் என். நாகரெட்னம், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் வி.ராஜகோபாலசிங்கம், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி முகுந்தன் நவரூபரஞ்சனி மற்றும் பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



அரசாங்க வங்கிகளினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவருகின்ற விவசாயக் கடன்கள் தொடர்பாக ஆராயப்பட்டு அரசாங்கம் முன்னெடுக்கும் விவசாயிகளுக்கான விசேட திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளதாக இங்கு தெரிவிக்கப்பட்டது.

விவசாயிகள் நெற்செய்கைக்கு முக்கியத்துவம் கொடுப்பது போன்று உப பயிர்ச்செய்கைக்கும் முக்கியத்துவம் வழங்க வேண்டும் எனவும் சேதன பசளைகளை அதிகளவாக பாவனைக்குக் கொண்டுவர வேண்டும் எனவும் இரசாயன பசளைகள் பயன்பாட்டினால் மனிதர்களுக்கு ஏற்படுகின்ற நோய்த்தாக்கம் பற்றி விவசாயிகளை விழிப்படையச் செய்யவேண்டும் எனவும் இங்கு அரசாங்க அதிபர் சகலரையும் கேட்டுக்கொண்டார்.

மேலும், சட்டவிரோத மண் அகழ்வு தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது. அரசாங்க அதிபரினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையிலேயே மண் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருவதுடன், சிலர் மாவட்ட நிர்வாகத்திற்கு எவ்விதமான தொடர்பும் இல்லாத வகையில் தன்னிச்சையாக செயற்பட்டு மண் அனுமதியை வழங்கி வருகின்றனர் இம் முறையானது மாவட்ட நிர்வாகத்திற்கு பெரும் சிக்கலை உருவாக்கி வருவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது எனவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது. நீர் முகாமைத்துவம் தொடர்பாக இங்கு ஆராயப்பட்டபோது, தற்போது குளங்களில் காணப்படுகின்ற நீரின் அளவானது 25வீதமான அளவாகும. எதிர்காலத்தில் மழைகாலம் ஆரம்பிக்க போதியளவான நீர் கிடைக்கும் என பணிப்பாளர்கள் குறிப்பிட்டனர்.




## உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நடைபவனி

( திருமலை)

ஆரோக்கியமான வாழ் வுக்காக உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி அதனை ஊக்கப்படுத்தும் முகமான நடைபவனியொன்று தம்பலகாமம் பிரதேச செயலகத்திலிருந்து தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலை வரை ஆரம்பமாகியது .



நேற்று முன்தினம் காலை 6.15 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வு திருகோணமலை பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனையின் மேற்பார்வையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், பிரதேச செயலாளரின் தலைமையில் தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் கடமை புரியும் அதிகாரிகள் மற்றும் பட்டதாரி பயிலுனர்கள், பிரதேச பொதுமக்கள் என பலரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு மகிழ்ச்சியான காலைப்பொழுதை ஆரம்பித்து வைத்தார்கள்.

இதன்போது பிரதேச வைத்திய பொறுப்பதிகாரி டொக்டர் டி. ஜீவராஜின் வேண்டுகோளுக்கிணங்க பிரதேச வைத்தியசாலையின் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட பிரதான நுழைவாயில் பிரதேச செயலாளர் ஜே.ஸ்ரீபதியினால் திறந்துவைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## 2015இல் தந்தையின் தோல்விக்கு நான் காரணமா? நீண்டகால மனச்சுமை இப்போதே நீங்குகின்றது!

**- சக்கி அதாஉல்லா**

கடந்த 2015ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் என்னுடைய தந்தையும் தேசிய காங்கிரஸின் தலைவருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா தோல்வியைத் தழுவ நானும் ஒரு காரணம் எனும் பழிச்சொல்லை என்மீது பலரும் சுமத்தியிருந்தார்கள். அதுமட்டுமன்றி, இட்டுக்கட்டிய பல செய்திகளையும் பேசிவந்தார்கள். ஆனால், இன்று கடந்த 5 வருடங்களாக என்னுடைய மனதில் இருந்துவந்த சுமை அகல்கிறது - என தேசிய காங்கிரஸின் பிரதிச் செயலாளர் நாயகமும் அக்கரைப்பற்று மாநகர முதல்வருமான அதாஉல்லா அஹமட் சக்கி தெரிவித்தார்.

தேசிய காங்கிரஸின் சார்பில் கடந்த பொதுத் தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தமக்கு வாக்களித்த வாக்காளர்கள், வெற்றிக்காக உழைத்த கட்சி முக்கியஸ்தர்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவித்து அக்கரைப்பற்று நீர்ப்பூங்காவில் தேசிய காங்கிரஸின் வெற்றிக் குளம்பொலி நிகழ்வு கடந்த சனிக்கிழமை அவரது தலைமையில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

என்னுடைய பெயரின் மீது படிந்திருந்த கரையைப் போக்க குறைந்தது ஒருநாளாவது தேசிய காங்கிரஸின் தலைவர் ஏதாவது ஒருவகையில் நாடாளுமன்றம் செல்லவேண்டும் என்று இறைவனிடம் பிரார்த்தித்தேன். அதற்குரிய பயன் எனக்குக் கிடைத்திருக்கிறது. அவரை வெல்லவைக்க வாக்களித்த அனைத்து உள்ளங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார்.

இந்நிகழ்வில் அவரது தந்தையும் தேசிய காங்கிரஸ் தலைவருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். மேலும் கடந்த பொதுத் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கிய வேட்பாளர்கள், தேசிய காங்கிரஸ் உயர்பீட மற்றும் செயற்குழு முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

## குடிநீர்த் தட்டுப்பாட்டுக்கு ஓட்டமாவடி பிரதேச சபையினால் தீர்வு

(கல்குடா)

நாட்டில் பரவலாக ஏற்பட்ட வரட்சி காரணமாக பாதிக்கப்பட்ட கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட தியாவட்டவான் 210 C, காவத்தமுனை, வடமுனை, ஊத்துச்சேனை பிரதேசங்களில் குடிநீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் வகையிலான ஆலோசனைக் கூட்டம் தவிசாளர் ஏ.எம்.நௌபர் தலைமையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இதில் குறித்த கிராமங்களின் சமூகமட்டப் பிரதிநிதிகள் கலந்துகொண்டதுடன், எதிர்காலத்தில் குடிநீர் வழங்குவதிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கீழ்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.



குடிநீர் வழங்குவதற்கு இதுவரை சேவையிலுள்ள இரண்டு பவுசர்களுக்கு மேலதிகமாக மேலும் ஒரு பவுசரை இணைத்தல், தண்ணீர் சீரான முறையில் வழங்கப்படுகிறதா என்பதை கண்காணிக்க சபை ஊழியர் ஒருவரை நியமித்தல், ஒவ்வொரு கிராமங்களின் சமூகத் தலைவர்களும் தமது கிராமங்களுக்கு ஒதுக்கப்பட்ட தினங்களுக்கு நீர் வழங்கப்படுகிறதா? என்பதை அவதானித்து அதில் ஏற்படும் பிழைகளை உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு வரல்.

மேற்படி பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத்தர உடனடி நடவடிக்கைகள் மேற்கொண்ட தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோருக்கு பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஜி.அஸீஸ்•ல் றஹீம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்தார்.



# கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் லீவு தொடர்பான சர்ச்சை தீர்க்கப்பட்டது

## கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் உடனடி நடவடிக்கை

(கல்முனை)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஏற்பட்ட பாடசாலை விடுமுறைக் காலத்தை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஆசிரியர்களுக்கான ஆண்டுக்குரிய சுகயீன விடுமுறை நாட்களை (41) குறைத்து மட்டுப்படுத்தும் வகையில் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் 2020.07.13ஆம் திகதியக் கடிதத்தின்மூலம் வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக பாடசாலைகளுக்கு அறிவுறுத்தியிருந்தது.

முன்னாள் மாகாணக் கல்விப் பணிப்பாளரது இச்செயற்பாடு கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் மட்டும் நடைமுறைப்படுத்த எடுத்த ஒரு முயற்சியாக முன்வைக்கப்பட்டிருந்தது.

இதனால் குழப்பமுற்ற கிழக்கு மாகாண ஆசிரியர்கள் இது தொடர்பான விமர்சனங்களை சமூக ஊடகங்களில் வெளிப்படுத்தியுள்ள நிலையிலும் பல்வேறு எதிர்வாதங்கள் முன்வைக்கப்பட்டுவந்தன.

இது தொடர்பாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ.நிஸாம் இது தொடர்பாக கூறியபோது,

தற்போதுள்ள கிழக்கு மாகாண ஆசிரியர் லீவு விடயம் தொடர்பாக ஆசிரியர் குழுவொன்று முறையிட்டது. அதுபோல் ஊடகங்களிலும் இந்த விடயம் வெளியிடப்பட்டிருந்தது.

அதற்கமைய இது தொடர்பான முறைப்பாட்டை உடனே ஆராய்ந்து கிழக்கு



மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் கவனத்திற்கு இதனை கொண்டுசென்று ஆசியர்களுக்கு உரிய லீவுகளை குறைத்து மட்டுப்படுத்த முடியாது என்ற விடயத்தை செயலாளருக்கு தெளிவுபடுத்தினோம்.

கடந்த காலங்களில்தான் இந்த விடயம் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தலாக முன்வைக்கப்பட்டிருக்கின்றது. என்பதை தெளிவுபடுத்தியதைத் தொடர்ந்து, இந்த லீவு தொடர்பாக ஏற்கனவே வழங்கிய குறிப்பிட்ட அறிவுறுத்தலை இரத்துச்செய்து, புதிய அறிவுறுத்தல் கடிதங்களை பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்குமாறு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் உடனடியாக பணிப்புரை வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் உடனடியாக செயற்பட்டு ஆசிரியர் லீவு தொடர்பாக வழமையாகவுள்ள சுகயீன, விடுமுறை நாட்களான 21, 20 நாட்களை பின்பற்றும் அறிவுறுத்தலை சகல பாடசாலைகளுக்கும் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இருந்தபோதிலும் லீவு உரிமை அல்ல, சலுகைதான் என்ற அடிப்படையில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் இருக்கின்ற காலத்திற்குள் பாதிக்கப்படாதவாறு உரிய பாட அலகுகளை இவ்வருடத்திற்குள் முடித்துக்கொள்ள வேண்டும் என்ற அவசியத்திற்கமைய, ஆசிரியர்களின் லீவு விடயத்தில் அதிபர்கள் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என்பதும் அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தியாக உணர்வோடு சேவையாற்றுகின்ற ஆசிரியர்களை குறைத்து மதிப்பிடமுடியாது. அவர்கள் சனி, ஞாயிறு போன்ற லீவு காலங்களில் கூட தங்களை அர்ப்பணித்து மாணவர்களின் நலனுக்காக சேவையாற்றுகின்ற நிலையில், அவர்களின் உணர்வுகளை புரிந்து நாம் செயற்படவேண்டும் என்ற அடிப்படையில் உடனடியாக நாம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் செயற்பட்டிருக் கின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

# அரசாங்கத்தின் நோக்கங்களை பட்டதாரிகள் வினைத்திறனாக நிறைவேற்றவேண்டும்

## - ஓட்டமாவடி பிரதேச செயலாளர் அஹமட் அப்கர்

(கல்குடா)

அரசாங்கத்தின் நோக்கங்களையும், எதிர்பார்ப்பு களையும் பட்டதாரிகளான நீங்கள் வினைத் திறனாகவும், விளைதிறனாகவும் நிறைவேற்று வீர்கள் என்ற எதிர்பார்ப்பு அரசாங்கத்திடம் உள்ளது - என ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.சி.அஹமட் அப்கர் தெரிவித்தார்.

புதிதாக நியமனம்பெற்ற பட்டதாரிகளை





வரவேற்கும் நிகழ்வு ஓட்டமாவடி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது தலைமை தாங்கி உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறு பட்டதாரிகள் இருக்கும் நிலையில் உங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது பாரிய வரப்பிரசாதமாகும். அந்தவகையில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயிற்சிநெறியில் முழுமையாக பங்கெடுக்காத சமயத்தில் உங்களுடைய நியமனத்தை உறுதிப்படுத்துவதில் பாரிய சிக்கல்கள் தோன்றுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. எனவே, இவ்வாறான விடயங்களுக்கு முகங்கொடுக்காமல் பயிற்சிநெறியை திறம்பட மேற்கொள்வது தங்களுக்கு அவசியமாகும் - என்றார்.

ஜனாதிபதியின் ஆலோசனையின்படி வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் செயற்றிட்டத்திற்கமைவாக நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்ட பட்டதாரிகள் பிரதேச செயலகங்கள்தோறும் தங்களது கடமைகளை பொறுப்பேற்றனர்.

அந்தவகையில் ஓட்டமாவடி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் தெரிவு செய்யப்பட்ட அறுபத்தொரு பட்டதாரிகளில் ஐம்பத்தொன்பது பட்டதாரிகள் தங்களுக்கான நியமனங்களை பொறுப்பேற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வில் செயலக கணக்காளர் ஐ.எஸ்.சஜ்ஜாத் அஹமட், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.றுவைத், நிர்வாக உத்தி யோகத்தர் எஸ்.அப்துல் ஹமீட் மற்றும் கடமையை பொறுப்பேற்ற பட்டதாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தனியார் காணியை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி

(கந்தளாய்)

கிண்ணியா, கண்டலடியூற்று பிரதேசத்தில் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் 18 குடும்பங்களுக்குச் சொந்தமான தனியார் காணியை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த வெள்ளியன்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி **(GOC)** மேஜர் ஜெனரல் சன்ன வீரசூரியவை அவருடைய அலுவலகத்தில் சந்தித்துப் பேசியதையடுத்து கட்டைபரிச்சான் முகாமுக்கு பொறுப்பான கட்டளைத் தளபதி பிரிகேடியர் சாந்த பெரேரா நேரடியாக சம்பந்தப்பட்ட காணிக்கு விஜயம் செய்து பார்வையிட்டு அக்காணியை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக உறுதியளித்தார்.








# மட்டக்களப்பு மாவட்டத்திற்கு புதிய நீர்ப்பாசனப் பணிப்பாளர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நீர்ப்பாசனப் பணிப்பாளராக பொறியியலாளர் நடராசா நாகரெத்தினம் கடந்த வெள்ளிக்கிழமை பதவியேற்றுள்ளார்.

இவர் கோட்டைக்கல்லாறு நடராசா - நாககன்னி தம்பதிகளின் புதல்வராவார்.

இவர் ஆரம்பக்கல்வியை கோட்டைக்கல்லாறு மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை கோட்டைக்கல்லாறு மகாவித்தியாலயத்திலும் உயர்தரக் கல்வியை கல்முனை பாத்திமா கல்லூரியிலும் கற்றவராவார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்று பொறியியல்துறையில் பி.எஸ்.சி. பட்டம்பெற்ற இவர், 1995ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி புனர்வாழ்வு அமைச்சில் பொறியியலாளராக நியமனம்பெற்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கடமையேற்றார். 1996ஆம் ஆண்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பொறியியலாளராக இணைந்துகொண்டார்.

மட்டக்களப்பு நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்திலும், உறுகாமம், நவகிரி பிரிவு நீர்ப்பாசன அலுவலகங்களிலும் நீர்ப்பாசனப் பொறியியலாளராக பத்து வருடங்களுக்குமேல் கடமையாற்றிய பின்னர் அரசின் புலமைப்பரிசில் பெற்று 2007ஆம் ஆண்டில் நெதர்லாந்து சென்று முதுமானிப்பட்டம் பெற்று 2009ஆம் ஆண்டு நாடு திரும்பினார்.

அதன் பின்னர் கல்கமுவ நீர்ப்பாசனப் பயிற்சிக்கல்லூரி மற்றும் பொலநறுவை, அம்பாறை நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகங்களில் பிரதம பொறியியலாளராக கடமையாற்றி 2016 ஆம் ஆண்டில் நீர்ப்பாசனப் பணிப்பாளராக பதவி உயர்வுபெற்று புத்தளம் நீர்ப்பாசனப் பணிப்பாளராகவும் அதனைத்தொடர்ந்து அநுராதபுரம் வடக்கு, வடமத்திய



வலய நீர்ப்பாசனப் பணிப்பாளராகவும் கடமையாற்றிய நிலையில், தற்போது மட்டக்களப்புக்கு இடமாற்றம் பெற்று கடந்த வியாழனன்று கல்லடியில் அமைந்துள்ள நீர்ப்பாசன திணைக்கள அலுவலகத்தில் கடமையைப் பொறுப்பேற்றார்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறந்த நீர் முகாமைத்துவத்தை இரண்டரை வருடங்கள் சிறப்பாக பணியாற்றிய நீர்பாசனப் பணிப்பாளர் எஸ்.எம்.வி.எம்.அசார் கொழும்பு நீர்ப்பாசன தலைமை காரியாலயத்திற்கு பொது வேலைகள் கட்டிட சேவைகள் பணிப்பாளராக இடமாற்றம் பெற்றுச் செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.




# கல்குடா ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டம்

(கல்குடா)

கல்வி அமைச்சினால் தேசிய ரீதியாக நடைமுறைப் படுத்தப்படும் பாடசாலை ஆசிரியர் வாண்மை விருத்தி வேலைத்திட்டம் தொடர்பாக ஓட்டமாவடி மத்திய





கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கான செயலமர்வு கல்குடா எம்.ஜே.எவ். நிலையத்தில் இடம்பெற்றது.

ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் அதிபர் எம்.ஏ.ஹலீம் இன்ஷாக் தலைமையில் நடைபெற்ற செயமலர்வில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.அஜ்மீர், கந்தளாய் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஜே.மர்சுக், காத்தான்குடி ஆசிரியர் வாண்மை விருத்தி நிலைய முகாமையாளர் ஏ.றியாஸ், கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம்.ரி.எம்.றிஸ்வி, ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.ஏ.அஹ்ஷாப், ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் ஆசிரியர்களான ஏ.எம்.அஸீஸ், ப.ஹானுகிருஷ்ணா ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டனர்.

இதன்போது பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை விருத்தி என்றால் என்ன?, ஆசிரியர் என்பது தொழில் அல்ல தொண்டு, ஆசிரியர் மாணவர்களுக்கு இடையிலான



தொடர்பு, ஆசிரியர்களின் கடமைகளும், பொறுப்புகளும், நிலைபேறான அபிவிருத்தி என்னும் தலைப்பில் கலந்துகொண்ட அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு கருத்துரைகள் வழங்கப்பட்டன.

# சீத்துவக்கேடு 68



காரைக்கவி கந்தையா பத்மானந்தன்

முந்தி அந்த நாளையில சிறிய சுவடி, பெரிய சுவடி, பம்பர வடிவச் சுவடி, சிவலிங்க வடிவச் சுவடி எண்டு கனவிதமான சுவடியள் எங்கட ஆக்களின்ரை பாவனையில இருந்திருக்கு கண்டியோ. தமிழன் செய்த பாவமோ இல்லாட்டில் தமிழன் ஆருக்கும் செய்த பாவமோ தெரியாது இப்பிடி எங்கட ஆக்களின்ரை பாவனையில சந்ததி சந்ததியா இருந்த இலச்சக்கணக்கான சுவடியள் எப்பிடி எண்டே தெரியாது காணாமல் போட்டுது. எத்தினையோ அழிஞ்சு போச்சுது. எத்தினையோ அழிபட்டுப் போச்சுது. நினைச்சா எவ்வளவு கவலையா இருக்கு கண்டியோ எண்டுவார் அப்பு.

கறையான், இராமபாணம் எண்ட பூச்சி, ஈரப்பதம், புகை, நெருப்பு, காற்று, மழை, வெயில், கடல் கோள் எண்டு இயற்கை ஒரு பக்கத்தில அழிச்சுப் போட்டுப் போக அந்நியரின்ரை அந்நிய மத்தினரின்ரை படை எடுப்பு அவங்களின்ரை தீவைப்பு அனல்வாதம் புனல்வாதம் எண்ட எங்கட ஆக்களின்ரை சமயப் போட்டிகள் பூசல்கள், பொறாமைகள், முட்டாள்தனங்கள் மூட நம்பிக்கைகள், அறிவீனங்கள் எண்டு எல்லாமே சேர்ந்து மற்றப் பக்கத்தால எத்தினையோ சுவடிகளை அழிச்சுப் போட்டுது எண்ட விசயம் உனக்குத் தெரியுமே.

அதுமட்டுமில்லாம வெளிநாட்டில இருந்து ஆராச்சி செய்ய எண்டு இந்தியாவுக்கு – இலங்கைக்கு எண்டு வந்த வெளிநாட்டாக்கள் கனபேர் கைக்கு கிடைச்ச ஏடுகளை எல்லாம் தங்கட நாடுகளுக்கு அள்ளிக்கொண்டு போட்டாங்கள். எங்கட சனமும் பசி – பஞ்சம் பட்டினியால காசுக்காக எண்டு கன ஏடுகளை உப்பிடியான பிறத்தியாருக்கு வித்துப் போட்டுதுகள்.

அதமாதிரி இந்தியாக்கு யாத்திரை எண்டு வந்த யுவான்சுவாங் மாதிரியான வெளிநாட்டுகாரங்கள் துறவியள் கனபேர் பல நூற்றுக்கணக்கான சுவடியளை தங்கட நாடுகளுக்கு ஒருத்தருக்கும் தெரியாமல் கடத்திக் கொண்டு போட்டாங்களாம் எண்டு உது பற்றி ஆராச்சி செய்தவை சொல்லுகினம் கண்டியோ எண்டுவார் அப்பு.

அதுமட்டுமே நீ ஆரும் உன்ரை ஆக்கள் வந்தா இஞ்சை வீட்டில இருக்கிற சாமான்களை எனக்குத் தெரியாமல் குடுக்கிற மாதிரி அந்த நாளையில இருந்த எங்கட கொஞ்ச மோட்டு மன்னர்மாரும் வெளிநாட்டில இருந்து வந்த தூதுக் குழுக்களுக்கு உந்த ஏடுகளை பெரிய பெருமையா நினைச்சு அன்பளிப்பு எண்டு குடுத்தவங்களாம்.



உன்ரை கொப்பர் மாதிரி, கொண்ணன் மாதிரி வாசிக்கத் தெரியாத கன மோட்டுச் சனங்கள். உதென்ன தேவையில்லாத குப்பை வீட்டுக்கை கிடக்கெண்டு நினைச்சு கன ஏடுகளை அள்ளி வெளியில கொட்டி இருக்கினம். நெருப்பில போட்டு எரிச்சிருக்கினம். ஆறு குளம் வழியை எல்லாம் கொண்டு போய் கொட்டி இருக்கினம் கண்டியோ.

ஆனால், ஒரு நிம்மதியான விசயம் என்னவெண்டால் இப்பிடி ஒருபக்கத்தில சுவடியள் அழிஞ்சாலும் இன்னொரு பக்கத்தில கனபேர் உதுகளைப் பாதுகாத்தும் இருக்கினம். அந்த நாளையில எங்கட ஆக்கள் வசம்பு, கருஞ்சீரகம், ஓமம், கிராம்பு, மிளகு, இலவங்கப்பட்டை தூள்களையும் விளைவு சூடத்தையும் கலந்து முடிச்சா கட்டி சுவடியளுக்கு அடியில வைச்சிருக்கினம். உதை அவை மணப்பொருள் முடிச்சு முறை எண்டு சொல்லி இருக்கினம்.

அதோட சுவடியளைப் பாதுகாக்கிறதுக்கு எண்டு வேப்பிலை, புதினா இலை, மஞ்சள் துண்டுகளையும் சுவடியளுக்கு இடையில போட்டு வைச்சிருக்கினம் எண்டு அறிஞ்ச ஆக்கள் சொல்லுகினம் கண்டியோ.

அத மாதிரி கற்பூரத்தை துணியில கட்டியும் சுவடியளுக்கு இடையில வைச்சு பாதுகாத்திருக்கினம். கோவையிலைச் சாத்தில அடுப்புக்கரி, வசம்புக்கரி, சிரட்டைக்கரி இதில ஏதாவது ஒண்டை எடுத்து அதோட விளக்கெண்ணை புகையையும் சேர்த்து செய்த மையையும் உந்த சுவடியளுக்கு அடியில பூசியும் பாதுகாத்திருக்கினமாம். வேப்ப எண்ணெயையும் சுவடியளுக்கு மேலையும் கீழையும் பூசி பூச்சி புழு ஒண்டும் அரிக்காம பாதுகாத்திருக்கினம் கண்டியோ.

இந்தக் காலத்தில எண்டால் பூச்சிக்கொல்லிகள் இரசாயனப் பொருட்களைப் பாவிச்சு இல்லாட்டில் தர்ப்பைப்புல் எண்ணெய் சித்திரனெல்லா எண்ணெய் மாதிரியான எண்ணையளைப் பாவிச்சு இல்லாட்டில் குளிர்சாதன அறையில் வைச்சு சுவடியளைப் பாதுகாக்கினம். அதைவிட நகலெடுத்தல், நுண்படச் சுருள் எடுத்தல், கணினியில் உள்ளீடு செய்தல் எண்ட முறைகளைப் பாவிச்சு சுவடியிலை உள்ள விசயங்களை கொப்பி பண்ணி எடுத்தும் பாதுகாக்கினம் கண்டியோ எண்டுவார் அப்பு.

அப்பு உப்பிடிச் சொல்லவும் கொஞ்சம் உம்முடைய பிரசங் கத்தை நிப்பாட்டும். உவங்கள் வெளிநாட்டுக்காறர் எங்கட சுவடியளை களவெடுத்தாங்கள். கடத்தினாங்கள் எண்டு நீர் சொல்லுறீர். ஆனால், என்னதான் வெளிநாட்டுக்காரர் எங்கட சுவடியளை கடத்தினாலும் களவு எடுத்தாலும் விலைக்கு வாங்கினாலும் அவங்கள் கன சுவடியளை கன இடங்களிலை இண்டைக்கும் கவனமா வைச்சு பாதுகாக்கிறாங்களாம் எண்டு நான் அறிஞ்சனான் கண்டீரோ எண்டுவா ஆச்சி.

உதாரணமா பாரிசிலுள்ள தேசிய நூலகம், இலண்டனிலுள்ள இந்திய ஆபீஸ் லைபரரி, வெல்கம் மருத்துவ ஆய்வு நிறுவனம், பிரிட்டன் அருங்காட்சியகம், ராயல் அசியாடிக் சொசைட்டி நூலகம், ஸ்காட்லாந்திலுள்ள எடின்பரோ பல்கலைக்கழக நூலகம், கிளஸ்கோ பல்கலைக்கழக நூலகம், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக நூலகம், ஆக்ஸ்போர்டிலுள்ள பாட்லியன் நூலகம், ரோம் நகரிலுள்ள நூலகம், டென்மார்க் கிலுள்ள கோபன்ஹேகன் நூலகம், அருங் காட்சியகம், கிழக்கு ஜெர்மனியில் ஆலே யிலுள்ள பிரான்க்ஸ் ஆவணக்காப்பகம், மார்டின் லூதர் பல்கலைக்கழக நூலகம், லிப்சிக்கிலுள்ள அருங்காட்சியகம், ஹம்பார்க்கிலுள்ள பல்கலைக்கழக நூலகம், ஸ்வீடனிலுள்ள அப்சாலா பல்கலைக்கழக நூலகம், ஸ்டாக்ஹோமிலுள்ள அருங்காட்சி யகம், சோவியத் யூனியனில் மாஸ்கோவி லுள்ள லெனின் நூலகம், லெனின் கிராட் பல்கலைக்கழக நூலகம், ஆர்மேனிய அறிவியல் கழகம் எண்டு கன இடங்களிலை வைச்சுப் பாதுகாக்கிறாங்கள் எண்டு அறிஞ்சனான் எண்டுவா ஆச்சி.

எங்கட ஆக்கள் கூட நினைக்காத உந்த விசயத்தை அதுதான் உந்த தமிழன்ரை சுவடியளைப் பாதுகாக்கவேணும் எண்ட விசயத்தை எவ்வளவோ கஸ்டத்துக்கு மத்தியில செலவுக்கு மத்தியில அவங்கள் வெள்ளைக்காரர் செய்யிறதால நாங்கள் அவங்களுக்கு எங்கட ஏழேழு சந்ததிக்கும் நன்றி சொல்ல வேணும் எண்ட விசயத்தை எங்கட ஆக்களுக்கு நாங்கள் சொல்ல வேணும் கண்டியோ எண்டுவார் அப்பு.

*(தொடரும்)*

## கொரோனாவிலிருந்து மீண்டார் எஸ்.பி.பி.



கொரோனாவிலிருந்து பாடகர் எஸ்.பி.பி. மீண்டுவிட்டதாக அவரது மகன் எஸ்.பி.சரண் தெரிவித்துள்ளார்.

"தந்தைக்கு கொரோனா பரிசோதனை செய்ததில் தொற்று இல்லை என உறுதியாகியுள்ளது. நுரையீரல் தொற்று குணமடைய சிறிது காலம் தேவைப்படுவதால் வெண்டிலேட்டர் மூலம் சிகிச்சை தொடர்கிறது" எனத் தெரிவித்துள்ளார்.

பிரபல பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்ர மணியம் கடந்த மாதம் 5ஆம் திகதி கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சில தினங்களுக்கு முன்பு அவரது உடல்நிலை மோசமடைந்தது. இதனால் அவசரசிகிச்சைப் பிரிவுக்கு மாற்றி செயற்கை சுவாசக் கருவிகள் பொருத்தி சிகிச்சையளித்தனர்.

தொடர்ந்து அவருக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது. எஸ்.பி.பி.யின் உடல்நிலை குறித்து தினசரி அப்டேட்டுகளை அவரது மகன் சரண் கொடுத்துவந்தார். ஆனால், கடந்த சில தினங்களாக எஸ்.பி.பி. உடல்நிலை குறித்து சரண் எந்தவித தகவலும் தெரிவிக்காமலிருந்தார். திங்கட்கிழமை நல்ல செய்தி வரும் என்று தெரிவித்திருந்தார்.

அதன்படி, நேற்று எஸ்.பி.பி. சரண் வெளியிட்டுள்ள வீடியோவில், 'கொரோனா பரிசோதனையில் எஸ்.பி.பி.க்கு நெகட்டிவ் என வந்துள்ளது. நுரையீரல் தொற்று குண மடைந்துவருகிறது. தொடர்ந்து பிசியோ தெரபி சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. ஐபேடில், கிரிக்கெட், டென்னிஸ் போட்டிகளை பார்த்து வருகிறார். பேச நினைப்பதை எழுதி காண்பிக்கிறார் – எனத் தெரிவித்துள்ளார்.

## விரைவில் கட்சி: களமிறங்கும் ரஜினி

அரசியலில் நுழைய இதோ, அதோ என சொல்லிக்கொண்டே வந்த ரஜினி, விரைவில் கட்சியைத் தொடங்க முடிவுசெய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான ஆயத்த வேலைகள், ஏறக்குறைய முடிந்துவிட்டநிலையில், இதற்காக பல சிரேஷ்ட ஊடகவியலாளர்களையும், விமர்சகர்களையும், ரஜினி சமீபத்தில் சந்தித்துள்ளார். கட்சி ஆரம்பிப்பது குறித்து அவர்களின் கருத்தைக் கேட்டறிந்ததோடு, கட்சி தொடங்கினால் மக்கள் மனநிலை எப்படியிருக்கும் என்றெல்லாம் கேட்டுள்ளார் ரஜினி. ஏற்கனவே கட்சி தொடங்கியிருக்கவேண்டும், கொரோனா பரவலால் தள்ளிப்போய்விட்டது எனவும் அவர்களிடம் தெரிவித்துள்ளார்.

தமிழக கட்சிகளின் பெயர்களில் திராவிடம் என்கிற வார்த்தை நிச்சயம் இருக்கும். ஆனால், ரஜினி கட்சியின் பெயரில் இது இருக்காது, ஆன்மீக பெயராக இருக்கும் என சொல்லப்படுகிறது.

### ராஜீவ்காந்தி கொலை வழக்கு:

## எழுவர் விடுதலை முடிவில் தமிழக அரசு அசமந்தம்

### அற்புதம்மாள் குற்றச்சாட்டு



7 பேர் விடுதலை பற்றி மாநில அரசே முடிவெடுக்கலாம் என உச்சநீதிமன்றமே உறுதிசெய்து 2 ஆண்டுகள் முடிந்தும் தமிழக அரசு முடிவெடுக்காமல் தாமதிப்பதாக பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறையிலிருக்கும் பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர் விடுதலை குறித்து அரசியலமைப்புச் சட்டம் 161இன்படி ஆளுநரே முடிவெடுக்கலாம் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டு 2 ஆண்டுகள் முடிவடைந்துவிட்டன. ஆனாலும் இதுவரை அதன் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் தெரிவித்துள்ளார்.

மேலும், எழுவரையும் விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா அளித்த வாக்குறுதியை அவரது பெயரை சொல்லி ஆட்சி நடத்தும் அ.தி.மு.க. அரசு நிறைவேற்றவில்லை என தெரிவித்துள்ளார். இந்நிலையில், கொரோனா பரவிவரும் சூழலில் பேரறிவாளனின் உடல்நிலையை கருத்திற்கொண்டு சிறை விடுப்பையாவது அளிக்கப்பட வேண்டும் என்று தமிழக அரசை அவர் வலியுறுத்தியுள்ளார். பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரும் கடந்த 28 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் வாடி வருகின்றனர்.

இந்நிலையில், அவர்களை விடுதலை செய்ய தமிழக அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநர் ஒப்புதலுக்காக அனுப்பிவைத்தது. ஆனால், 2 ஆண்டுகளான பிறகும் அதன் மீது ஆளுநர் முடிவெடுக்காமல் காலம் கடத்தி வருகிறார் என்பது முறைப்பாடாகும். அதாவது, ஆளுநர் தொடர்ந்து இதுகுறித்து எவ்வித முடிவும் எடுக்காமல் உள்ளதால், அற்புதம்மாள் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.




### நவால்னி கொலைச் சதி:

## ஜேர்மன் அரசு அதிரடி: ரஷ்யா மீது பொருளாதாரத் தடை!

"ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னிக்கு, ஜனாதிபதி புட்டின் விஷம் வைத்ததற்கான ஆதாரம் கிடைத்துள்ளது. இதையடுத்து ரஷ்யா மீது பொருளாதாரத் தடை விதிக்க ஆலோசித்து வருகிறோம்" என ஜேர்மன் அரசு அறிவித்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி புட்டினையும், அவரது அரசின் ஊழலையும் கடுமையாக விமர்சித்து வந்தவர் அலெக்சி நவால்னி. ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலின்போதும் தொடர் பிரசாரங்களில் ஈடுபட்ட அலெக்சி நவால்னிக்கு இளைஞர்கள் மத்தியில் பரவலான வரவேற்பு இருந்தது. ஆனால், புட்டின் அரசு அவர் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தி, அவரைத் தேர்தலில் போட்டியிட முடியாமல் செய்தது. இருப்பினும், அலெக்சி நவால்னி தொடர்ந்து பொதுவெளியில் புட்டின் அரசை விமர்சித்துவந்தார். இந்நிலையில், கடந்த 3ஆம் திகதி டாம்ஸ்க் நகரிலிருந்து மாஸ்கோவுக்கு விமானத்தில் செல்லும்போது அலெக்சி மயங்கி வீழ்ந்தார்.

உடனடியாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். 'டாம்ஸ்க் விமான நிலையத்தில் அலெக்சி குடித்த டீயில் விஷம் கலந்திருக்கலாம்' என அவரது ஆதரவாளர்கள் குற்றஞ்சாட்டினர். ரஷ்யாவில் அவரது உயிருக்குப் பாதுகாப்பில்லை எனக் கூறி, பெர்லினுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அவருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

'அலெக்சிக்கு நேர்ந்தது குறித்து வெளிப்படையான விசாரணை நடத்தப்படவேண்டும்' என பிரான்ஸ், ஜேர்மன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இந்நிலையில், ஜேர்மனி வெளியுறவுத்துறை அமைச்சர் ஹெய்கோ மாஸ்,



"ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நாவல்னிக்கு ரஷ்ய ஜனாதிபதி புட்டின் விஷம் வைத்தார் என்பதற்கு எங்களுக்கு ஆதாரம் கிடைத்துள்ளது. அலெக்ஸி நவால்னிக்கு ஏற்பட்டநிலை குறித்து போதிய விளக்கத்தை வழங்காவிட்டால் ரஷ்யா மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படுவது குறித்து ஆலோசிக்கப்படும்" எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தப்புவாரா அசாஞ்சே?

### சூடுபிடிக்கும் நாடுகடத்தும் வழக்கு!



விக்கிலீக்ஸ் தொடர்பாக கிரிமினல் குற்றஞ்சுமத்தப்பட்ட ஜூலியன் அசாஞ்சே, அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படுவதை எதிர்த்துத் தொடர்ந்த வழக்கு பல மாதங்களுக்குப் பின்பு மீண்டும் லண்டன் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது. இந்த வழக்கு விசாரணைதான் ஜூலியன் அசாஞ்சேவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் என்பதால் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவைப் பூர்வீகமாகக்கொண்ட 49 வயதாகும் ஜூலியன் அசாஞ்சே விக்கிலீக்ஸ் இணையதளத்தின் நிறுவனராவார். உலக நாடுகளின் இரகசிய ஆவணங்கள், மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள், முறைகேடுகள், ஊழல் மற்றும் போர்க்குற்றங்கள் போன்ற இரகசிய ஆவணங்களை ஹேக் செய்து விக்கிலீக்ஸ் இணையதளத்தில் வெளியிட்டார்.

குறிப்பாக, ஈராக்கில் அமெரிக்க இராணுவம் நடத்திய கோரத் தாண்டவம், அரசியல் கைதிகளை அடைக்கும் குவாண்டனமோ சிறைச்சாலை உள்ளிட்ட தகவல்கள் உலகையே அதிர்ச்சியுறச் செய்தன. இது அமெரிக்காவுக்குப் பெரியளவில் தலைவலியை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து ஜூலியன் அசாஞ்சே மீது அமெரிக்கா கிரிமினல் வழக்கு தொடர்ந்தது.

அமெரிக்காவுக்கு எதிராக செயற்படும் ரஷ்ய உளவாளி என்றும் அசாஞ்சே மீது குற்றஞ்சுமத்தப்பட்டது. சுவீடனில் அவர் மீது பாலியல் வழக்கும் பதிவானது. பாலியல் வழக்கை விசாரித்த சுவீடன் நீதிமன்றம், ஜூலியன் அசாஞ்சே நீதிமன்றத்தில் ஆஜராகும் வாய்ப்பு இல்லாததால், வழக்கைக் கைவிட்டது. எனினும், சுவீடனுக்குள் நுழைந்தால் இந்த வழக்கு மீண்டும் விசாரணை செய்யப்படும் என்றும் நீதிமன்றம் அறிவித்தது.

ஜூலியன் அசாஞ்சேவுக்கு ஆதரவு வழங்கிய ஒரே நாடு ஈகுவடோர் தான். லண்டனிலுள்ள ஈகுவடோர் நாட்டு தூதாரகத்தில் அவர் தஞ்சமடைந்தார். ஆனாலும், அமெரிக்காவின் அழுத்தம் காரணமாக அவரைக் கைவிட்டது ஈகுவடோர். இதைத் தொடர்ந்து, 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஈகுவடோர் தூதரகத்துக்குள்ளே நுழைந்த பிரிட்டன் பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர். அதன் பின்னர், தென்கிழக்கு லண்டனில் **HMP** பெல்மார்ஷ் சிறையிலடைக்கப்பட்டார் ஜூலியன் அசாஞ்சே. கைதான அசாஞ்சேவைத் தங்களிடம் ஒப்படைக்கக் கோரி அமெரிக்கா பிரித்தானியாவிடம் கோரிக்கை விடுத்தது. அமெரிக்காவிடம் தன்னை ஒப்படைக்கக்கூடாது என்று கூறி லண்டன் நீதிமன்றத்தில் அசாஞ்சே வழக்கு தொடர்ந்தார். கொரோனா அச்சுறுத்தலால் இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்ட நிலையில், மீண்டும் விசாரணை தொடங்கவுள்ளது.

இந்த வழக்கு விசாரணைதான் ஜூலியன் அசாஞ்சேவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் என்கிறார்கள் அரசியல் விமர்சகர்கள். ஜூலியன் அசாஞ்சேவை எப்படியாவது விடுவித்துவிட வேண்டும் என்று அவரது மனைவி ஸ்டெல்லா மேரிஸ் இந்திய பெறுமதிப்படி சுமார் 85 இலட்சம் ரூபாவரை நிதி திரட்டி சட்டப்போராட்டம் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.



## 18ஆவது முறையாக நான்காவது சுற்றுக்கு முன்னேறிய செரீனா

கொரோனா வைரஸ் சவாலுக்கு மத்தியில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் தற்போது நடைபெற்றுவரும் அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில், அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

'கிராண்ட்ஸ்லாம்' அந்தஸ்துபெற்ற அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் முன்னாள் முதல்நிலை வீராங்கனையும், 6 முறை சம்பியனுமான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், மற்றுமொரு அமெரிக்கரான 2017ஆம் ஆண்டு சம்பியன் ஸ்லோன் ஸ்டீபன்சை எதிர்கொண்டார்.

இப்போட்டியில் முதல் செட்டை பறிகொடுத்த செரீனா வில்லியம்ஸ் பின்னர் ஆக்ரோஷமாக விளையாடி சரிவிலிருந்து மீண்டார். 12 ஏஸ் சர்வீஸ்கள் வீசியது அவருக்கு உதவிகரமாக இருந்தது. முடிவில் செரீனா 2-6, 6-2, 6-2 என்ற செட் கணக்கில் ஸ்லோன் ஸ்டீபன்சை தோற்கடித்து 18ஆவது முறையாக 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். செரீனா வில்லியம்ஸ் அடுத்த போட்டியில் கிரீஸ் வீராங்கனை மரியா சக்காரியை சந்திக்கிறார்.

## டெல்லி அணிக்குள்ளும் கொரோனா

ஆவது இந்தியன் பிரிமியர் லீக் தொடர் ஆரம்பமாவதற்கு இன்னும் இரு வாரங்களுக்கும் குறைவான காலப்பகுதி எஞ்சியுள்ள நிலையில், தற்போது டெல்லி கெப்பிட்டல்ஸ் அணியின் துணை பிசியோதெரபிஸ்டுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் விளையாடுவதற்காக 8 அணிகளும் ஐக்கிய அரபு இராச்சியம் சென்றுள்ளன. சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் இரண்டு வீரர்கள் உட்பட 13 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டது. இது மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ஒரே அணியில் பெரும்பாலானோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டதால் இவ்வருடத்திற்கான இந்தியன் பிரிமியர் லீக் தொடர் நடைபெறுமா? இல்லையா? என்ற கேள்வி கூட எழுந்தது. ஆனால், ஏனையவர்கள் ஆரோக்கியத்துடன் காணப்பட தற்போது சென்னை சுப்பர் கிங்ஸ் குழாம் பயிற்சிகளில் ஈடுபட்டுவருகிறது.

இந்நிலையில், டெல்லி கெப்பிட்டல்ஸ் அணியின் துணை பிசியோதெரபிஸ்டுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் டெல்லி அணி தெரிவிக்கையில்,

"கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ள துணை பிசியோதெரபிஸ்ட் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். முதல் இரண்டு சோதனையின்போது தொற்று இல்லை என முடிவு வந்தது. ஆனால், மூன்றாவது சோதனையில் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கை கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் தசுன் சானக்க கடந்த சனிக்கிழமை திருமணப் பந்தத்தில் இணைந்துகொண்டார்.

## இங்கிலாந்து அணிக்கு அபராதம்

சுற்றுலா அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதலாவது இருபதுக்கு இருபது போட்டியில் குறைந்த பந்துவீச்சு பிரதி காரணமாக சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் (ஐ.சி.சி.) நேற்று முன்தினம் இங்கிலாந்து அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடரின் முதல் போட்டியில் இங்கிலாந்து அணி 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா அணியை வீழ்த்தி த்ரில் வெற்றிபெற்றது. சர்வதேச கிரிக்கெட் பேரவையின் விதிப்படி இருபதுக்கு இருபது போட்டியில் ஒரு அணி 90 நிமிடங்களில் அனைத்து ஓவர்களையும் வீசி முடிக்கவேண்டும்.



இந்நிலையில், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் போட்டியில் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் விதிமுறைப்படி குறிப்பிட்ட நேரத்திற்குள் இங்கிலாந்து வீரர்கள் ஒரு ஓவர் குறைவாக வீசியிருந்தனர். இதனால் இங்கிலாந்து வீரர்களுக்கு போட்டியின் சம்பளத்திலிருந்து 20 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

போட்டியின் கள நடுவர்களான மார்ட்டின் சாகர்ஸ் மற்றும் அலெக்ஸ் வார்ஃப், மூன்றாவது நடுவர் டேவிட் மில்ன்ஸ் மற்றும் நான்காவது நடுவர் மைக் பர்ன்ஸ் ஆகியோர் குறித்த குற்றச்சாட்டை முன்வைத்தனர். இந்த குற்றச்சாட்டை இங்கிலாந்து அணித்தலைவர் இயன் மோர்கன் ஒப்புக்கொண்டதுடன், அபராதத்தையும் ஏற்றுக்கொண்டார். அதனடிப்படையில் முறையான விசாரணைக்கு எந்த அவசியமும் ஏற்படவில்லை.

# விளையாட்டு

thamilansports@yahoo.com

கிருத்தி – அகீல்

## பட்லரின் அபாரத்தால் தொடர் இங்கிலாந்து வசம்



சுற்றுலா அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது தொடரின் இரண்டாவது போட்டியிலும் இங்கிலாந்து அணி இலகு வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியது.

முதல் போட்டியில் இங்கிலாந்து அணி த்ரில் வெற்றிபெற்றிருந்த நிலையில், இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் சவுதம்டணில் நடைபெற்றது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஆரோன் பிஞ்ச் முதலில் துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பத்தை பெற்றுக்கொண்டார். அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட் இழப்பிற்கு 157 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

ஆஸி. அணியின் துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் ஆரோன் பிஞ்ச் 40 ஓட்டங்களையும், மார்கஸ் ஸ்டொயினிஸ் 35 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாக பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் கிறிஸ் ஜோர்டன் 40 ஓட்டங்களுக்கு இரு விக்கெட்டுகளையும், மார்க் வுட், ஆதில் ரஷீட், ஜொப்ரா ஆர்ச்சர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

158 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஜொஸ் பட்லரின் அபார துடுப்பாட்டத்தின் உதவியுடன் 18.5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று இன்னும் ஒரு போட்டி மாத்திரம் எஞ்சியுள்ள நிலையில், இருபதுக்கு இருபது தொடரை கைப்பற்றியது.

போட்டியின் ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டத்தில் 54 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 8 பௌண்டரிகளுடன் 77 ஓட்டங்களைக் குவித்த ஜொஸ் பட்லர் தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான இருபதுக்கு இருபது தொடரின் இறுதிப்போட்டி இன்று இதே மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## சினேகபூர்வ கடினபந்து கிரிக்கெட் போட்டியில் சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக் கழகம் வெற்றி

(எம்.என்.எம்.அப்ராஸ்)



சாய்ந்தமருது மியன்டாட் விளையாட்டுக் கழகத்துக்கும், சாய்ந்தமருது நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை சாய்ந்தமருது பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சினேகபூர்வ கடினபந்து கிரிக்கெட் போட்டியில் மியன்டாட் விளையாட்டுக் கழகம் 2 விக்கெட்டுகளினால் வெற்றிபெற்றது.

அணிக்கு 20 ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் ஆரம்பத்தில் துடுப்பாடிய நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் சகல விக்கெட்டுகளையும் இழந்து 135 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. 136 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு பதிலுக்குத் துடுப்பாடிய மியன்டாட் விளையாட்டுக் கழகம் 15.3 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 27 பந்துகள் மீதமிருக்க, போட்டியில் இரு



விக்கெட்டுகளினால் வெற்றிபெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக மியாண்டாட் அணியின் ஏ.எச்.எம். முர்சித் தெரிவானார்.

இச்சினேகபூர்வ கடினபந்து கிரிக்கெட் போட்டிக்கு அதிதிகளாக நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஏ.எம்.மஃரூப், மியன்டாட் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஏ.பாயிஸ், பிரதித் தலைவர் ஏ.எல்.எம். றிஸ்வி, அமைப்பாளர் கே.எம்.பயான், முகாமையாளர் யூ.எல்.பரீட் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## வடமாகாண பிரிமியர் லீக் சுற்றுப்போட்டி பிரமாண்டமாக ஆரம்பம்

(வவுனியா)

வடமாகாண துடுப்பாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் 'வடக்கு பிரிமியர் லீக்' சுற்றுப்போட்டி வவுனியா நகரசபை மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

வடமாகாண துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவர் யோ.ரதீபன் தலைமையில் ஆரம்பமான சுற்றுப்போட்டியில் வடக்கைச் சேர்ந்த ஐந்து மாவட்டங்களின் அணிகள் பங்குபற்றின.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா நகர மத்தியிலுள்ள மணிக்கூட்டு கோபுரத்தடியிலிருந்து ஏ-9 பிரதான வீதி வழியாக ஐந்து மாவட்ட அணி வீரர்கள் மற்றும் பிரமுகர்கள் பாண்ட் வாத்தியத்துடன் அழைத்துவரப்பட்டு விளையாட்டு நிகழ்வுகள் பிரமாண்டமாக ஆரம்பமாகின.

இப்போட்டிகள் லீக் முறையில் இடம்பெறும் அதேவேளை, ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதி வரை இடம்பெற்று இறுதிப்போட்டி அன்றையதினம் பிரமாண்டமான முறையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான செ.மயூரன், ப.சத்தியலிங்கம், வடமாகாண துடுப்பாட்டச் சங்கத்தின் செயலாளர் வேலாயுதம் சுந்தரலிங்கம் மற்றும் விளையாட்டு வீரர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.







Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7